சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

# கலை மற்றும் பண்பாடு
# அருங்காட்சியகங்கள்
# தொல்லியல்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 – 2022

## மானியக் கோரிக்கை எண். 29

## தங்கம் தென்னரசு
தொழில் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2021

# அட்டவணை


| வ. எண். | பொருளடக்கம் | பக்க எண். |
|---|---|---|
| 1. | கலை மற்றும் பண்பாடு | 1–70 |
| 2. | அருங்காட்சியகங்கள் | 71–110 |
| 3. | தொல்லியல் | 111–171 |

# கலை பண்பாட்டுத் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2021 – 2022

## 1. முன்னுரை

கலையும் பண்பாடும் நாகரிகத்தின் சாதனைகளின் உச்ச நிலையை வெளிப்படுத்துகின்றன. நாகரிகம் வளம் மற்றும் மனிதகுலத்தின் நிலையான சாதனைகளின் வெளிப்பாடு ஆகும். கலை, மனித உணர்வுகள் மற்றும் அதன் பெருமைகளை விவரித்து அவற்றை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாக திகழ்கிறது. கலையானது தொன்மையான மரபுகளையும், பண்பாட்டினையும் ஆவணப்படுத்தி பாதுகாக்கிறது.

பல நூற்றாண்டுகளுக்கும் மேலாக மக்களின் சாதனைகளை பிரதிபலிக்கும் இலக்கியங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் மற்றும் சுவரோவியங்களை தமிழ்நாடு வழங்கியுள்ளது. நமது பழங்கால இலக்கியங்கள் தகவல் களஞ்சியங்களாக திகழ்கின்றன. சிலப்பதிகாரத்தில் நடனத்தைப் பற்றியும், மேடை அமைப்பதைப் பற்றியும் விரிவான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. தமிழ் இலக்கியங்களில், வாளை அடகு வைத்தும், யாழை அடகு வைத்தும்

விருந்தோம்பிய சம்பவங்கள் இடம்பெற்று இருக்கின்றன.

ஒவியங்களும் சிற்பங்களும் வாழ்வின் மாறுபட்ட நிலையினை பிரதிபலித்து, எதிர்காலத் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்கின்றன. நம் தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கல்லில் வடிக்கப்பட்ட கவிதைகள். அவை எதிர்காலத் தலைமுறைக்குக் கடந்தகால வரலாற்றை ஆவணப்படுத்தும் கூடங்களாக இருக்கின்றன.

பண்பாடு, அக விழுமியங்களால் நிர்ணயிக்கப் படுகிறது. நாகரிகத்தில் மேம்பட்டவர்கள் எல்லாம் பண்பாட்டில் பட்டொளி வீசிச் சிறப்பதில்லை. மனிதனின் விருந்தோம்பல், பழகும் தன்மை, நேர்மை, சான்றாண்மை, பெருந்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனோபாவம் ஆகியவைதான் பண்பாட்டுக் கூறுகள்.


தமிழர்கள் இசையோடு ஒன்றி வாழ்பவர்கள். தமிழகத்தில் பிறக்கும்போது தாலாட்டும், விளையாடும் போது கும்மியும், நீர்பாய்ச்சும்போது ஏற்றப்பாட்டும், நடும்போது நாற்றுப் பாட்டும் கலந்து நம் வாழ்க்கையை இசைமயமாக ஆக்குகிறது. தமிழ் மொழியில் உள்ள பழமொழிகள்கூட எதுகையும் மோனையும் இயைந்து இன்னிசையாகக் காதுகளில் ஒலிக்கின்றன.

கலையும் பண்பாடும் ஒரு நாட்டு மக்களின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் கண்ணாடியாகத் திகழ்கின்றன.

## 1.1. கலை பண்பாட்டு இயக்ககம்

கலை பண்பாட்டு இயக்ககம் 1991 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு ஆணையர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. ஏழு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம், இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகள், ஒரு அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி, நான்கு அரசு இசைக் கல்லூரிகள், ஒரு அரசு நிதியுதவி பெறும் கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, பதினேழு மாவட்ட அரசு இசைப் பள்ளிகள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் மற்றும் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் ஆகியவற்றின் செயல்பாடுகளை கலை பண்பாட்டுத் துறை கண்காணிக்கிறது. இணை இயக்குநர், மண்டல உதவி இயக்குநர்கள், கணக்கு அலுவலர் மற்றும் துறையின் இதர அலுவலர்கள் கலை பண்பாட்டுத்

**துறை ஆணையருக்கு உதவியாக செயல்பட்டு வருகின்றனர்.**



## 1.2. துறையின் நோக்கங்கள்

கலை பண்பாட்டுத் துறையின் நோக்கங்களாவன:-

- செவ்வியல், நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்களை ஊக்குவிக்கும் விதமாக அவர்களுக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்புகள் வழங்குதல்.
- கலைஞர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.
- நிகழ்த்துக் கலைகள் மற்றும் கவின் கலைகளை கற்பித்தல் மற்றும் ஊக்குவித்தல்.
- கலை நிகழ்ச்சிகள் வாயிலாக பல்வேறு கலை வடிவங்களை காட்சிப்படுத்துதல்.
- நலிந்த நிலையில் உள்ள கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- கலைஞர்களை ஊக்குவிப்பதன் வாயிலாகவும், கலை வடிவங்களை வளர்ப்பதற்கு ஆதரவளிப்பதன் வாயிலாகவும், நாட்டுப்புறக் கலை வடிவங்களை பாதுகாத்தல்.
- ஓவிய சிற்பக் கலைக்காட்சிகள் நடத்தி சிறந்த சிற்பிகள், ஓவியர்களுக்கு விருதுகள் வழங்குதல் மற்றும் செவ்வியல், கிராமிய கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல்.
- பல்வேறு கலை வடிவங்களை ஆவணமாக்குதல்.

## 1.3. மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்

மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் ஏழு இடங்களில் ஏற்படுத்தப்பட்டு, உதவி இயக்குநர்களின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டலக் கலை பண்பாட்டு மையமும் நான்கு முதல் எட்டு மாவட்டங்களை உள்ளடக்கியது. இம்மையங்கள் வாயிலாக கலை விழாக்கள், கலைப்போட்டிகள், கலைப் பயிற்சி முகாம்கள் மற்றும் ஓவிய–சிற்பக் கலைக்காட்சிகள் மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இவை மாவட்டக் கலை மன்றங்கள், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள், சவகர் சிறுவர் மன்றங்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஆகியவற்றின் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

| வ.எண் | மண்டலக் கலை பண்பாட்டு மையம் | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம்,<br>திருவண்ணாமலை,<br>செங்கல்பட்டு,<br>சென்னை, |

| | | |
|---|---|---|
| | | திருவள்ளூர், வேலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் |
| 2 | சேலம் | சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி |
| 3 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், கள்ளக் குறிச்சி மற்றும் மயிலாடுதுறை |
| 4 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் மற்றும் அரியலூர் |
| 5 | மதுரை | மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் தேனி |
| 6 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் தென்காசி |
| 7 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி மற்றும் திருப்பூர் |

மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் கீழ்வரும் கலைவிழாக்களை நடத்துகின்றன:–

| வ. எண் | மண்டலத்தின் பெயர் மற்றும் கலை விழாக்கள் | |
|---|---|---|
| 1 | **காஞ்சிபுரம் மண்டலம்** | |
| | கார்த்திகை தீபம் | திருவண்ணாமலை மாவட்டம் |
| | ஆடிக்கிருத்திகை | திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம் |
| | மகாசிவராத்திரி | காஞ்சிபுரம் |
| | கோடை விழா | ஏலகிரி, திருப்பத்தூர் மாவட்டம் |
| | | ஜவ்வாது மலை, திருவண்ணாமலை மாவட்டம் |
| 2 | **சேலம் மண்டலம்** | |
| | கோடை விழா | ஏற்காடு, சேலம் மாவட்டம் |
| | ஆடிப் பெருக்கு விழா | தர்மபுரி மாவட்டம் |
| | மாங்கனி விழா | கிருஷ்ணகிரி மாவட்டம் |
| | வல்வில் ஓரி விழா | நாமக்கல் மாவட்டம் |

| | | |
|---|---|---|
| 3 | **தஞ்சாவூர் மண்டலம்** | |
| | சீர்காழி தமிழிசை மூவர் விழா | மயிலாடுதுறை மாவட்டம் |
| | ராஜராஜசோழன் சதய விழா | தஞ்சாவூர் மாவட்டம் |
| | ஆழித்தேர் விழா | திருவாரூர் மாவட்டம் |
| 4 | **திருச்சிராப்பள்ளி மண்டலம்** | |
| | வைகுண்ட ஏகாதசி விழா | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| | அருள்மிகு நந்திதேவர் திருக்கல்யாண விழா | திருமழப்பாடி, அரியலூர் மாவட்டம் |
| | திருநெடுங்குடி மகாசிவராத்திரி விழா | புதுக்கோட்டை மாவட்டம் |
| 5 | **மதுரை மண்டலம்** | |
| | கோடை விழா | கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம் |
| | சித்திரை திருவிழா | மதுரை |
| 6 | **திருநெல்வேலி மண்டலம்** | |
| | பாவை விழா | ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் |

| | | |
|---|---|---|
| | சாரல் விழா | குற்றாலம்,<br>தென்காசி மாவட்டம் |
| | அருவித்திருவிழா | திற்பரப்பு,<br>கன்னியாகுமரி<br>மாவட்டம் |
| | குமரித் திருவிழா | கன்னியாகுமரி<br>மாவட்டம் |
| 7 | **கோயம்புத்தூர் மண்டலம்** | |
| | தீரன் சின்னமலை விழா | ஈரோடு மாவட்டம் |
| | ஆடிப் பெருந் திருவிழா | திருப்பூர் மாவட்டம் |
| | கோடை விழா | உதகை,<br>நீலகிரி மாவட்டம் |
| | | வால்பாறை,<br>கோயம்புத்தூர்<br>மாவட்டம் |

### 1.4. மாவட்டக் கலை மன்றங்கள்

கலைகளை மேம்படுத்துவதற்கும், பரப்புவதற்கும் பேணிப் பாதுகாத்திடவும் 1994 ஆம் ஆண்டு மாவட்டக் கலை மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவை திறமையுள்ள இளங்கலைஞர்களைக் கண்டறிந்து, அவர்களது திறனை வெளிக்கொணர வாய்ப்பளிக்கின்றன. இம்மன்றங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் திறன்படைத்த ஐந்து கலைஞர்களைக்

கண்டறிந்து பின்வருமாறு விருதுகள் வழங்குகின்றன:—

| வ. எண் | வயதுப் பிரிவு | விருதின் பெயர் | விருதுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | 18 வயதிற்கு உட்பட்டவர்கள் | கலை இளமணி | 4,000 |
| 2 | 19 முதல் 35 வயதுக்கு உட்பட்டவர்கள் | கலை வளர்மணி | 6,000 |
| 3 | 36 முதல் 50 வயதுக்கு உட்பட்டவர்கள் | கலைச் சுடர்மணி | 10,000 |
| 4 | 51 முதல் 60 வயதுக்கு உட்பட்டவர்கள் | கலை நன்மணி | 15,000 |
| 5 | 61 வயதிற்கு மேற்பட்டவர்கள் | கலை முதுமணி | 20,000 |

கலைஞர்கள் அரசின் நிதி உதவி பெறுவதற்கும், அரசு நடத்தும் கலை நிகழ்ச்சிகளில் முன்னுரிமை பெறுவதற்கும் மற்றும் பயணச் சலுகை பெறுவதற்கும் அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுகாறும், மாவட்டங்களில் 59,445 கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.5. கல்வி நிறுவனங்கள்

பல்வேறு நிலைகளில் நிகழ்த்துக்கலை மற்றும் கவின் கலைகளை வளர்ப்பதற்காக கலைக் கல்வி நிறுவனங்களை அரசு நிறுவியுள்ளது.

### 1.5.1. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம்

தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம் 2013–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகச் சட்டம், 2013, 14.11.2013 அன்று இயற்றப்பட்டது. இப்பல்கலைக் கழகம் "தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம்" என 2020 ஆம் ஆண்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இப்பல்கலைக் கழகத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், நாதஸ்வரம் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் முதுகலைப் பட்டப் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

2015–2016 ஆம் கல்வியாண்டு முதல் முனைவர் பட்டப் படிப்புகள் துவங்கப்பட்டன. 2016–2017 ஆம் கல்வியாண்டு முதல் வார இறுதி நாட்களில் ஓவியம் மற்றும் காட்சிவழி தகவல் தொடர்பு வடிவமைப்பு

பிரிவுகளில் மூன்றாண்டு பகுதிநேர முதுகலை பட்டப் படிப்புகள் துவங்கப்பட்டன. 2018–2019 ஆம் கல்வியாண்டு முதல் ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்) படிப்புகள் துவங்கப்பட்டன.

கலை பண்பாட்டுத் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டில் செயல்படும் நான்கு தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளும், இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகளும், ஒரு அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி மற்றும் அரசு உதவி பெறும் திருச்சிராப்பள்ளி கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி ஆகிய 8 கல்லூரிகள் இப்பல்கலைக் கழகத்தின் கல்வி கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

சென்னையில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம், தமிழிசைக் கல்லூரி, ராஜா அண்ணாமலை மன்றம் மற்றும் மதுரையில் அமைந்துள்ள சத்குரு சங்கீத வித்யாலயம் ஆகியன 2016 முதல் இப்பல்கலைக் கழகத்தின் கல்விக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.

### 1.5.2. அரசு இசைக் கல்லூரி, சென்னை

சென்னை அரசு இசைக் கல்லூரி 1949 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இங்கு கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:–

- குரலிசை, வயலின், வீணை ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்புகள்.
- குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கஞ்சீரா, முகர்சிங், நாதசுரம், தவில், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகள்.
- நட்டுவாங்கத்தில் ஈராண்டு பட்டயப் படிப்பு.
- இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு.
- மாலை நேர இசைக்கல்லூரி மையத்தில் குரலிசை, வீணை, வயலின் மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

### 1.5.3. அரசு இசைக் கல்லூரி, மதுரை

மதுரை அரசு இசைக் கல்லூரி 1979 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இங்கு கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:–

- குரலிசையில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்பு.
- குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், தவில், புல்லாங்குழல், நாதசுரம், பரதநாட்டியம் மற்றும் நாட்டுப்புறக் கலைகள் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகள்.
- இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு.
- மாலை நேர இசைக்கல்லூரி மையத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

### 1.5.4. அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரி 1993 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இங்கு கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:–

- குரலிசை, வீணை மற்றும் வயலின் பிரிவுகளில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்புகள்.
- குரலிசை, வயலின், வீணை மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகள்.

- இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு.
- மாலை நேர இசைக்கல்லூரி மையத்தில் குரலிசை, வீணை, வயலின் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

### 1.5.5. அரசு இசைக் கல்லூரி, திருவையாறு

திருவையாறு அரசு இசைக்கல்லூரி 1997 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இங்கு கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:–

- இசையில் முனைவர் பட்டம்
- குரலிசை மற்றும் வீணை ஆகியவற்றில் இரண்டாண்டு முதுகலை பட்டப் படிப்புகள்.
- குரலிசை மற்றும் வீணை ஆகியவற்றில் மூன்றாண்டு இளங்கலை பட்டப் படிப்புகள்.
- குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம், நாதசுரம் மற்றும் தவில் ஆகியவற்றில் மூன்றாண்டு பட்டயப் படிப்புகள்.
- இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பு.

அரசு இசைக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களை ஊக்குவிப்பதற்காக ஒவ்வோர்

ஆண்டும் 10 மாதங்களுக்கு மாதம் ரூ.500/- வீதம் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

### 1.5.6. மாவட்ட அரசு இசைப்பள்ளிகள்

மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் 1997 ஆம் ஆண்டு திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், சேலம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும், 1998 ஆம் ஆண்டு விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், தூத்துக்குடி மற்றும் கரூர் ஆகிய இடங்களிலும், 1999 ஆம் ஆண்டு காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை, கிருஷ்ணகிரி மற்றும் சீர்காழி ஆகிய இடங்களிலும், 2000 ஆம் ஆண்டு ஈரோடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களிலும் தோற்றுவிக்கப்பட்டன.

- குரலிசை, பரதநாட்டியம், நாதசுரம், தவில், தேவாரம், வயலின் மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.
- மாணாக்கர்களுக்கு மாதந்தோறும் ரூ.400/- வீதம் ஒவ்வொரு கல்வியாண்டிலும் பத்து மாதங்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

### 1.5.7. அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை

சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரி 1850 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இங்கு கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:–

- சுடுமண் வடிவமைப்பு (Industrial Design in Ceramic), துகிலியல் வடிவமைப்பு (Industrial Design in Textile), காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் பதிப்போவியம் (Print Making) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலைப் பட்டப் படிப்புகள்.
- சுடுமண் வடிவமைப்பு (Industrial Design in Ceramic), துகிலியல் வடிவமைப்பு (Industrial Design in Textile), காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை (Painting) மற்றும் சிற்பக்கலை (Sculpture) ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப் படிப்புகள்.

### 1.5.8. அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம்

கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரி 1887 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இங்கு கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:–

- வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலை பட்டப் படிப்புகள்.
- வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design) ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப் படிப்புகள்.

### 1.5.9. அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம்

மாமல்லபுரத்தில் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியானது 1957 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இங்கு கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:–

- மரபு கட்டடக் கலையில் பி.டெக்., (B.Tech in Traditional Architecture), மரபு சிற்பக் கலையில் பி.எப்.ஏ., (கற்சிற்பம், சுதை சிற்பம், மரச் சிற்பம் மற்றும் உலோகச் சிற்பம்) (B.F.A in Traditional Sculpture), மரபு ஓவியம் மற்றும் வண்ணக்கலையில்

பி.எப்.ஏ., (B.F.A in Traditional Drawing and Painting) ஆகிய நான்காண்டு பட்டப் படிப்புகள்.

### 1.5.10. கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி 1996 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இது அரசு நிதியுதவி பெறும் கல்லூரி ஆகும். இக்கல்லூரியின் நிர்வாகம் கலை பண்பாட்டுத் துறையாலும், நிதிநல்கை கல்லூரிக் கல்வித் துறையாலும் மேற்கொள்ளப்படுகிறது. இங்கு கீழ்க்கண்ட படிப்புகள் வழங்கப்படுகின்றன:–

- இசையில் முனைவர் பட்டப்படிப்பு.
- இசையில் ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்) பட்டப் படிப்பு.
- பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலை பட்டப் படிப்புகள்.
- பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு பட்டப் படிப்புகள் மற்றும் மூன்றாண்டு பட்டப் படிப்புகள்.

## 1.6. தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்

ஐந்து வயது முதல் பதினாறு வயதுக்குட்பட்ட மாணாக்கர்களுக்கு கலைப் பயிற்சிகள் வழங்குதல், அவர்களிடம் மறைந்துள்ள கலைத் திறமைகளை வெளிக்கொணர்தல், கலைக்கல்வி வழங்குதல் ஆகியவற்றை செயல்படுத்திடும் பொருட்டு 1979 ஆம் ஆண்டு சவகர் சிறுவர் மன்றம் சென்னையில் தொடங்கப்பட்டது.

தற்போது, சவகர் சிறுவர் மன்றங்கள், 24 இடங்களில் மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்களாகவும் 14 இடங்களில் விரிவாக்க மையங்களாகவும் 02 இடங்களில் ஊரக மையங்களாகவும் ஆக மொத்தம் 40 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| **1** | **மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்கள்** | சென்னை, புதுக்கோட்டை, மதுரை, உதகமண்டலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், கன்னியாகுமரி, தஞ்சாவூர், காஞ்சிபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, சேலம், இராமநாதபுரம், திண்டுக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, வேலூர், திருவள்ளூர், ஈரோடு, திருவாரூர், விருதுநகர் மற்றும் விழுப்புரம். |

| | | |
|---|---|---|
| 2 | **விரிவாக்க மையங்கள்** | பெரம்பலூர், தஞ்சாவூர், குளித்தலை, கரூர், சென்னை (டாக்டர். எம்.ஜி.ஆர் காது கேளாதோர் மேல்நிலைப்பள்ளி, ராமாபுரம்), மதுரை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை, நாமக்கல், வியாசர்பாடி, வில்லிவாக்கம், மேற்கு தாம்பரம் மற்றும் சேலையூர். |
| 3 | **ஊரக மையங்கள்** | பொன்புதுப்பட்டி (புதுக்கோட்டை மாவட்டம்) மற்றும் ஒத்தக்கடை (மதுரை) |

சென்னை, மயிலாப்பூர், லஸ் அவென்யூவில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் பழைய பழுதடைந்த கட்டடங்களை இடித்துவிட்டு, அவ்விடத்தில் சுமார் 628 ச.மீ. பரப்பளவில் ரூ.1.75 கோடி செலவில் சவகர் சிறுவர் மன்ற நிதியிலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**1.6.1. சவகர் சிறுவர் மன்றங்களின் பகுதிநேர பயிற்சிகள்**

குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, நாடகம், உடல்திறன் பயிற்சி, மிருதங்கம்,

தபேலா, கராத்தே, கணினி, கீபோர்டு, வீணை, அயல்முரசு (டிரம்ஸ்), அயல்முழவு (பேண்ட்), தையல், ஓவியம் மற்றும் வண்ணம் தீட்டுதல், திரைஅச்சு, புல்லாங்குழல், யோகா மற்றும் சிலம்பாட்டம் ஆகிய கலைகளில் சென்னையிலும் தேவைக்கேற்ப மேலுள்ள ஏதேனும் 4 கலைகளில் மாவட்ட மையங்களிலும் பகுதி நேரக் கலைப்பயிற்சிகள் சிறார்களுக்கு வழங்கப்படுகின்றன.

**பயிற்சித் திட்டங்கள்**

**1.6.2. மாவட்ட அளவிலான கோடைக்கால கலைப்பயிற்சி முகாம்கள்**

மாவட்ட அளவில் கோடைக்கால கலைப்பயிற்சி முகாம்கள் சவகர் சிறுவர் மன்ற மையங்களில் நடத்தப்படுகின்றன.

**1.6.3. மாநில அளவிலான கோடைக்கால மற்றும் குளிர்கால பயிற்சி முகாம்கள்**

ஆண்டுதோறும் கோடைக்காலத்தில், ஏதாவது ஒரு மலைவாழிடத்தில் மாநில அளவிலான கோடைக்கால உண்டு உறைவிட முகாம் நடத்தப்படுகிறது. ஆண்டுதோறும் அரையாண்டு விடுமுறையின் போது ஏதாவது ஒரு மாவட்டத்தில் மாநில அளவிலான

குளிர்கால உண்டு உறைவிட முகாமும் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு முகாமிலும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 100 சவகர் மன்ற சிறார்களுக்கு பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், குரலிசை, ஓவியம், கைவினை, யோகா மற்றும் சிலம்பாட்டம் ஆகிய கலைகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

### 1.6.4. மாநில அளவிலான கைவினை முகாம்

ஆண்டுதோறும் காலாண்டு விடுமுறையின் போது மாநில அளவிலான உண்டு உறைவிட முகாம் நடத்தப்படுகிறது. இம்முகாமில் சுடுமண் சிற்பம், பொம்மை செய்தல், துணி ஓவியம், பத்திக், கைவினை, மெழுகுவர்த்தி செய்தல் போன்ற பல்வேறு கலைகளில் தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களிலிருந்து 100 சவகர் சிறுவர் மன்ற சிறார்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

### 1.6.5. மாவட்ட மற்றும் மாநில அளவிலான கலைப் போட்டிகள்

குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம் மற்றும் ஓவியம் ஆகிய கலைகளில் 5 முதல் 8 வயது, 9 முதல் 12 வயது மற்றும் 13 முதல் 16 வயது

பிரிவினர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் மாவட்ட அளவிலான கலைப்போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

மாவட்டக் கலைப்போட்டிகளில் முதல் பரிசு பெற்ற 9 முதல் 12 வயது, 13 முதல் 16 வயது பிரிவு மாணாக்கர்களுக்கிடையே மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்படுகின்றன. மாநில அளவிலான போட்டிகளில் முதல் பரிசாக ரூ.10,000/– வீதம் 8 மாணாக்கர்களுக்கும் (2 வயதுப் பிரிவு x 4 கலைப்பிரிவு) இரண்டாவது பரிசாக ரூ.7,500/– வீதம் 8 மாணாக்கர்களுக்கும் மற்றும் மூன்றாவது பரிசாக ரூ.5,000/–வீதம் 8 மாணாக்கர்களுக்கும் என 24 மாணாக்கர்களுக்கு மொத்தம் ரூ.1,80,000/– பரிசுத் தொகையும், பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

### 1.6.6. தேசிய அளவிலான திட்டங்களில் சவகர் சிறுவர் மன்ற மாணாக்கர்கள் பங்கேற்பு

ஆண்டுதோறும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த தினத்தை (நவம்பர்–14) கொண்டாடும் வகையில், புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தில் மூன்று நாட்கள் தேசிய ஒருமைப்பாட்டு கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். இந்நிகழ்ச்சிகளில்

தேசிய சிறுவர் மன்றத்தில் இணைவு பெற்று செயல்படும் தமிழகத்தினைச் சேர்ந்த 21 சவகர் சிறுவர் மன்றங்களிலிருந்து மாணவ, மாணவிகள் கலந்து கொள்கின்றனர்.

### 1.6.7. தேசிய பாலஸ்ரீ விருது

தேசிய பாலஸ்ரீ விருதிற்கு தகுதியான நபர்களை தெரிவு செய்யும் பொருட்டு புதுதில்லி தேசிய சிறுவர் மன்றத்தால் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் முறையே படைப்பாக்கச் செயல்திறன் (Creative Performance – Dance, Vocal Music, Percussion, Instrumental Music, Theatre Art, Puppetry), நுண்கலை படைப்பாற்றல் (Creative Art – Painting, Craft, Sculpture, Visual Art), படைப்பாற்றல் மிக்க அறிவியல் புதுமைகள் (Creative Scientific Innovations – Scientific Model Making, Project Making, Scientific Innovations, Problem Solving) மற்றும் எழுத்துக்கலை படைப்பாற்றல் (Creative Writing – Story, Prose, Poem, Dialogue and Play) ஆகிய 4 வகையான முதன்மைக் கலைகளில், 16 வகை கலைப்பிரிவுகளில் நடத்தப்படுகின்றன.

முதற்கட்டமாக மாவட்ட அளவிலான போட்டிகளும் தொடர்ந்து மாநில அளவிலான போட்டிகளும் நடைபெறும். இறுதியாக,

தெரிவு செய்யப்படுபவர்களுக்கிடையே தேசிய அளவிலான போட்டிகள் நடத்தப்படுகின்றன.

### 1.7. 'கலைச்செம்மல்' விருதுகள்

மரபுவழி மற்றும் நவீனபாணி கலைப் பிரிவுகளில் சிறந்து விளங்கும் ஓவியம் மற்றும் சிற்பக் கலைஞர்களுக்கு தமிழக அரசால் "கலைச்செம்மல் விருதுகள்" வழங்கப்படுகின்றன. விருதுடன் செப்புப்பட்டயமும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன. விருதுக்கானத் பரிசுத் தொகை ரூ.50,000/– லிருந்து ரூ.1,00,000/– ஆகவும், விருதுகளின் எண்ணிக்கை 2 லிருந்து 6 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதுகாறும், மரபுவழிப் பிரிவில் 21 கலை வல்லுநர்களுக்கும், நவீனபாணிப் பிரிவில் 52 கலை வல்லுநர்களுக்கும் இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.8. மாநில அளவில் மரபுவழி, நவீனபாணிப் பிரிவுகளில் ஓவிய–சிற்பக் கலைக்காட்சி மற்றும் விருதுகள்

தமிழ்நாட்டிலுள்ள கலைஞர்களிடமிருந்து ஓவியம் மற்றும் சிற்பக் கலைப்படைப்புகள் பெறப்பட்டு, மிகச்சிறந்த கலைப்படைப்புகள் அரசால் அமைக்கப்படும் தெரிவுக் குழுவால் தெரிவு செய்யப்படுகின்றன. சிறந்த மரபுவழி, நவீனபாணி

ஓவியம் மற்றும் சிற்ப கலைப்படைப்புகள் கலைக்காட்சியாக காட்சிப்படுத்தப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன. முதுநிலைப் பிரிவில் (30வயதுக்கு மேற்பட்ட) தலா ரூ.15,000/- வீதம் 30 விருதுகளும், இளநிலைப்பிரிவில் (30வயதுக்குட்பட்ட) தலா ரூ.10,000/- வீதம் 30 விருதுகளும் என மொத்தம் 60 கலைஞர்களுக்கு ரூ.7.50 இலட்சத்திற்கு பரிசுத்தொகையும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

**1.9. தனி நபர் கலைக்காட்சி (One man Show) மற்றும் கூட்டுக் கலைக்காட்சி (Group Show) நடத்திட கவின் கலைஞர்களுக்கு நிதியுதவி**

ஓவியம் மற்றும் சிற்பக் கலைகளில் வளர்ந்துவரும் கலைஞர்களை ஊக்கப்படுத்த தனிநபர் கலைக்காட்சிகள் மற்றும் கூட்டுக் கலைக்காட்சிகள் நடத்தப்படுகின்றன. தனிநபர் கலைக்காட்சி நடத்திட ரூ.25,000/-வீதம் 10 கலைஞர்களுக்கும், கூட்டுக் கலைக்காட்சி நடத்திட குழுவிற்கு ரூ.50,000/- வீதம் 5 குழுக்களுக்கும் நிதியுதவி வழங்கிட மொத்தம் ரூ.5 இலட்சம் வழங்கப்படுகிறது.

## 1.10. கவின்கலை பயிலும் மாணாக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை

அரசு கவின் கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களை ஊக்கப்படுத்தும் விதமாக சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில், இறுதியாண்டு இளங்கவின்கலை பயிலும் சிறந்த 10 மாணாக்கர்களுக்கு தலா ரூ.3,000/– வீதமும், இறுதியாண்டு முதுகவின்கலை பயிலும் சிறந்த 4 மாணாக்கர்களுக்கு தலா ரூ.5,000/–வீதமும் கல்வி உதவித்தொகை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோன்று, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியில் இறுதியாண்டு இளங்கவின்கலை பயிலும் சிறந்த 10 மாணாக்கர்களுக்கு ரூ.3,000/– வீதமும், இறுதியாண்டு முதுகவின்கலை பயிலும் சிறந்த 2 மாணாக்கர்களுக்கு ரூ.5,000/–வீதமும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் ஆண்டுதோறும் 26 சிறந்த மாணாக்கர்கள் பயனடைகின்றனர். இதற்கென ரூ.90,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தந்த கல்லூரி முதல்வர்களின் பரிந்துரையின்படி கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### 1.11. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்

தமிழ்நாட்டிலுள்ள நாட்டுப்புறக் கலைகளை வளர்த்தல், மக்களிடையே பிரபலப்படுத்துதல் மற்றும் அக்கலைகளை அழியாமல் பாதுகாத்து எதிர்கால தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லுதல் ஆகிய நோக்கங்களுக்காக நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிதியுதவிகள் வழங்கிட அரசால் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், 2007 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. நாட்டுப்புறக் கலைஞர்கள் தமிழகத்தில் பல்வேறு கிராமியக் கலை வடிவங்களை நிகழ்த்துகின்றனர். தமிழக அரசு 100 நாட்டுப்புறக் கலை வடிவங்களை அடையாளங்கண்டு பட்டியலிட்டுள்ளது.

இதுவரை, வாரியத்தில் 43,175 நாட்டுப்புறக் கலைஞர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். 8,134 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகள் ரூ.157.53 இலட்சம் செலவில் கீழ்வருமாறு வழங்கப்பட்டுள்ளன:–

| வ. எண் | நலத்திட்ட விவரம் | பயனாளிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | மூக்குக் கண்ணாடி வாங்குதல் | 3456 | 18.32 |
| 2 | கல்வி | 3448 | 47.82 |

| | | | |
|---|---|---|---|
| 3 | திருமணம் | 592 | 14.08 |
| 4 | மகப்பேறு | 19 | 1.14 |
| 5 | கருச்சிதைவு/ கருக்கலைப்பு | 1 | 0.03 |
| 6 | இயற்கை மரணம்/ ஈமச்சடங்கிற்கான செலவுகள் | 618 | 76.14 |
| | மொத்தம் | 8134 | 157.53 |

கொரோனா பெருந்தொற்றினால் மாநிலத்தில் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவின் போது, பதிவுப் பெற்ற நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு உதவிடும் வகையில், தமிழக அரசால் கீழ்வருமாறு நிவாரணம் வழங்கப்பட்டது:–

| வ. எண் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ.) | பயனடைந்த நாட்டுப்புறக் கலைஞர் களின் எண்ணிக்கை | செலவினம் (ரூ.) |
|---|---|---|---|
| 1 | 3,73,85,000 (ஒரு கலைஞருக்கு ரூ.1000/– வீதம்) | 24,845 (முதல் தவணை) | 2,48,45,000 |
| 2 | 3,73,85,000 (ஒரு கலைஞருக்கு ரூ.1000/– வீதம்) | 24,649 (இரண்டாம் தவணை) | 2,46,49,000 |
| 3 | (ஒரு கலைஞருக்கு ரூ.1000/–வீதம்) | 501 (சென்னை | 5,01,000 |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்கள்) | |
| 4 | மாண்பமை சென்னை, உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் (தவில், நாதசுரம்,தெருக் கூத்து மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ரூ.2000/-வீதம்) | 6,810 | 1,36,20,000 |
| மொத்தம்-7,47,70,000 | | | 6,36,15,000 |

நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகளுக்கு கல்வி, திருமணம், பிரசவம், இறப்பு போன்றவற்றிற்கு கீழ்வருமாறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன:-

| வ.எண் | நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிதி உதவிகள் விவரம் | நிதி உதவித் தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | ஆண்டு கல்வி உதவித் தொகை (இரு வாரிசுகள் ) | |

| | | |
|---|---|---|
| | பத்தாம் வகுப்பு பயிலும் மகள் | 1,000 |
| | பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,000 |
| | பதினோராம் வகுப்பு பயிலும் மகள் | 1,000 |
| | பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மகள் | 1,500 |
| | பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,500 |
| | முறையான பட்டப் படிப்பு | 1,500 |
| | முறையான பட்டப் படிப்பு விடுதியில் தங்கி பயிலுதல் | 1,750 |
| | முறையான முதுகலை பட்டப்படிப்பு | 4,000 |
| | முறையான முதுகலை பட்டப்படிப்பு விடுதியில் தங்கி பயிலுதல் | 5,000 |
| | தொழில்நுட்ப பட்டப்படிப்பு (சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம்) | 4,000 |
| | தொழில்நுட்ப பட்டப் படிப்புகள் விடுதியில் தங்கி பயிலுதல் | 6,000 |
| | முறையான முதுகலை தொழிற்படிப்பு | 6,000 |
| | முறையான முதுகலை தொழிற்படிப்பு விடுதியில் தங்கி பயிலுதல் | 8,000 |

| | | |
|---|---|---|
| | தொழில்நுட்ப பயிலகப் படிப்பு (பாலிடெக்னிக்) தொழிற் பயிற்சி நிலைய படிப்பு ( ஐ.டி.ஐ) | 1,000 |
| | தொழில்நுட்ப பயிலகப் படிப்பு (பாலிடெக்னிக்) தொழிற் பயிற்சி நிலைய படிப்பு (ஐ.டி.ஐ) விடுதியில் தங்கி பயிலுதல் | 1,200 |
| 2 | திருமண நிதியுதவி உறுப்பினர்/ மகன்/ மகள் ( இரண்டு முறை மட்டும்) | 5,000 |
| 3 | மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு நிதியுதவி (பெண் உறுப்பினர்களுக்கு இருமுறை மட்டும்) | |
| | அ) குழந்தை பிறப்பு | 6,000 |
| | ஆ)கருச்சிதைவு/ கருக்கலைப்பு | 3,000 |
| 4 | கண்கண்ணாடி வாங்குவதற்கான நிதியுதவி (மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மட்டும்) | 1,500 |
| 5 | இயற்கை மரணத்திற்கான செலவினம் | 20,000 |
| 6 | ஈமச்சடங்கிற்கான செலவினம் | 5,000 |
| 7 | விபத்து மரணச் செலவினம் | 1,00,000 |

## 1.12. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

தமிழக பாரம்பரிய கலைகளை போற்றி பேணி பாதுகாத்து வளர்ப்பதற்கு, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், 1955 ஆம் ஆண்டு தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கமானது இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்க் கலைகளை அங்கீகரிக்கும் வகையில் 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

### 1.12.1. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைப்பணிகள்

- மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம் செய்தல்.
- அகில இந்திய அளவில் "பாரதி" (இயல்), "எம்.எஸ்.சுப்புலட்சுமி" (இசை), "பாலசரசுவதி" (நடனம்) ஆகியோர் பெயர்களில் விருதுகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துதல்.
- மாநில அளவில் கலைமாமணி விருது வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துதல்.
- தொழில்முறை நாடகக் குழுக்கள் மற்றும் நாட்டிய நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி அளித்தல்.

- பல்வேறு கலை விழாக்கள் நடத்துதல் மற்றும் அயல்நாடுகளில் பாரம்பரிய தமிழக கலைகளைப் பரப்புதல்.
- தொன்மை வாய்ந்த அரிய கலை வடிவங்களை ஆவணமாக்குதல்.
- அரிய கலை நூல்களை வெளியிட நல்கை வழங்குதல்.
- இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், கலை நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்பு அளித்தல்.

### 1.12.2. கலைமாமணி விருது

கலைமாமணி விருதாளர்களுக்கு, ஐந்து சவரன் தங்க பதக்கமும் (40 கிராம்), பொன்னாடையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன. இதுவரை 1,924 கலைஞர்களுக்கு "கலைமாமணி" விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.12.3. இதர பணிகள்

- நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு திங்கள் தோறும் ரூ.3,000/– நிதியுதவி வழங்குதல்.
- மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பங்களுக்கு, ஒருமுறை குடும்ப பராமரிப்பு நிதியுதவியாக ரூ.25,000/– வழங்குதல்.

- வறிய நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்கு தலா ரூ.50,000/- மதிப்பிலான பொற்கிழி வழங்குதல்.
- நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கலைக்குழுக்களுக்கு இசைக்கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்குவதற்கு நிதியுதவி வழங்குதல்.
- நாடகக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்கள் வெளியூர்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்திட அரசுப் பேருந்துகள் மற்றும் தொடர்வண்டிகளில் பயணக் கட்டணச் சலுகை வழங்க உரிய அலுவலகத்திற்கு பரிந்துரைத்தல்.

### 1.13. தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்

இந்திய அரசின் கலாச்சாரத் துறையின் ஒரு தன்னாட்சி அமைப்பாக, தமிழ்நாடு அரசு மற்றும் இதர நான்கு தென்னிந்திய மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களின் ஒத்துழைப்புடன் தஞ்சாவூரில், தென்னகப் பண்பாட்டு மையம் 1986 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இம்மையம், உறுப்பு மாநிலங்களில் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

## 1.14. அறிவிப்புகள் 2020–2021

1. தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றங்களின் பகுதிநேர கலையாசிரியர்கள், ஒருங்கிணைப்பாளர்களுக்கு வழங்கப்படும் தொகுப்பூதியம் பின்வருமாறு உயர்த்தப்பட்டது:–
   - சென்னை – ரூ.4,000/–லிருந்து ரூ.5,000/–
   - மாவட்டங்கள் – ரூ.3,000/–லிருந்து ரூ.4,000/–
   - ஊரக மையங்கள் – ரூ.2,000/–லிருந்து ரூ.3,000/–
2. கலைச்செம்மல் விருதுக்கான தொகை ரூ.50,000/–லிருந்து ரூ.1,00,000/– ஆகவும் விருதாளர்கள் எண்ணிக்கை 2–லிருந்து 6–ஆகவும் உயர்த்தப்பட்டது.
3. கலை பண்பாட்டு இயக்ககத்திற்கு இரண்டு துணை இயக்குநர் பணியிடங்கள் தோற்றுவிக்க ரூ.19 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
4. கிருஷ்ணகிரி, சீர்காழி மற்றும் சிவகங்கை மாவட்ட அரசு இசைப்பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.330 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
5. புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள தென்காசி, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய 5 மாவட்டங்களில்

மாவட்டக் கலை மன்றங்கள் ஏற்படுத்துவதற்காக ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

6. உதவி இயக்குநர்களுக்கு 3 மடிக்கணினிகள் வாங்க ரூ.2.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.
7. ஏழு மண்டலக் கலை பண்பாட்டு மையங்களுக்கும், கலை பண்பாட்டு இயக்ககத்திற்கும் காட்சிப்படுத்தும் பலகைகள் வாங்க ரூ.4.85 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.
8. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக இயல், இசை, நாடகம், நாட்டியம் மற்றும் கிராமியக் கலை விழாக்கள் நடத்திட ரூ.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.
9. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக இரண்டு புதிய நாடகங்கள் மற்றும் இரண்டு புதிய நாட்டிய நாடகங்கள் மேடையேற்றம் செய்திட ரூ.6 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.
10. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக குரலிசை, கருவியிசை மற்றும் பரதநாட்டியம் ஆகிய கலைகளில்

திறமைப் படைத்த புத்திளம் கலைஞர்களுக்கு நிதியுதவி அளித்து ஊக்கமளிக்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுவரும் நல்கை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தப்பட்டது .

11. நாடகத் தந்தை தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகளின் நினைவு நாளான நவம்பர் 13–ஆம் தேதியினை அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடும் வகையில் அவரின் இரு நாடகங்களை நடத்திட ரூ.2 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.
12. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் அரிய கருத்தாழமிக்க கலைகள் சார்ந்த நூல்களை பதிப்பிக்க சிறந்த தகுதியுள்ள நூலாசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.
13. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக, சங்க காலம் முதல் தற்போது வரை தமிழிசையில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், ஆவணப்படுத்தவும், மற்றும் குறும்படங்கள்

தயாரிக்கும் பணிகளுக்காகவும் ரூ.5 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

**1.15. சாதனைகள்**

1. மதுரை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் ரூ.95 இலட்சம் செலவில் கட்டப்பட்ட கூடுதல் கட்டடங்கள் மற்றும் ரூ.75 இலட்சம் செலவில் கட்டப்பட்ட கோயம்புத்தூர் மண்டல கலை பண்பாட்டு மையக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டன.
2. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்திற்கு ரூ.14.85 கோடி செலவினத்தில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், சென்னை, தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்திற்கு ரூ.1.75 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டப்பட்டது.
3. தேசிய பாலஸ்ரீ விருதுபெற்ற 23 சிறார்களுக்கு மாநில அரசின் சார்பில் பாராட்டுத் தொகை ரூ.15,000/-, பாராட்டுப்பத்திரம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.
4. 2020-2021 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்ற மதிப்பீட்டுக் குழுவினரின் (Parliamentary

Committee on Estimates 2020–2021) வருகையின் போது கலை பண்பாட்டுத்துறை சார்பில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

5. இந்திய சுதந்திரத்தின் 75 ஆம் ஆண்டினை முன்னிட்டு சென்னை, வேலூர், வேதாரண்யம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருவையாறு, தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் கலை நிகழ்ச்சிகள் ரூ.7.47 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

6. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நலிந்த நிலையில் வாழும் வயோதிகக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், நிதியுதவியினை திங்கள் ஒன்றுக்கு ரூ.3,000/– ஆக உயர்த்தி 11 கலைஞர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்கள்.

7. மண்டல அளவிலான ஓவிய–சிற்பக் கண்காட்சிகள் நாமக்கல், மதுரை, வேலூர், திருநெல்வேலி மற்றும் ஈரோட்டில் நடைபெற்றன.

## 1.16. கலை நிகழ்ச்சிகள் – 2020–2021

| வ. எண் | கலை நிகழ்ச்சிகள் | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | மாவட்ட கிராமியக் கலை விழா | கிருஷ்ணகிரி 08.01.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 2.00 |
| 2. | மாவட்ட கிராமியக் கலை விழா | நாமக்கல் 09.01.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.25 |
| 3. | ஓவிய / சிற்பக் கண்காட்சி | நாமக்கல் 09.01.2021 மற்றும் 10.01.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.00 |
| 4. | பாரத் பர்வ் இணையவழி செவ்வியல் கலை நிகழ்ச்சிகள் | சென்னை 11.01.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 1.45 |
| 5. | பொங்கல் கலை விழா | தருமபுரி 12.01.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.25 |
| 6. | உலக நாடக தினத்தை முன்னிட்டு நாடக விழா | சேலம் 12.01.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.20 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | பொங்கல் கலை விழா | அரியலூர் 13.01.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப் பள்ளி | 1.34 |
| 8. | பாரத் பர்வ் இணைய வழி கிராமியக் கலை நிகழ்ச்சிகள் | திருச்சிராப் பள்ளி 15.01.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப் பள்ளி | 1.40 |
| 9. | புதிய நாட்டிய நாடகம் மேடை யேற்றம் | சென்னை 22.01.2021 மற்றும் 29.01.2021 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | 0.75 |
| 10. | ஓவிய / சிற்பக் கண்காட்சி | மதுரை 26.01.2021 முதல் 28.01.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 1.00 |
| 11. | ஓவிய / சிற்பக் கண்காட்சி | வேலூர் 30.01.2021 முதல் 01.02.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 1.00 |
| 12. | சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு நாடக விழா | புதுக் கோட்டை 06.02.2021 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | 1.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 13. | மாவட்ட கிராமியக் கலை விழா | புதுக் கோட்டை 06.02.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப் பள்ளி | 2.00 |
| 14. | உலக நாடக தினத்தை முன்னிட்டு நாடக விழா | திருச்சிராப் பள்ளி 07.02.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப் பள்ளி | 1.50 |
| 15. | ஓவிய / சிற்பக் கண்காட்சி | திருநெல் வேலி 08.02.2021 முதல் 10.02.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 1.00 |
| 16. | உலக நாடக தினத்தை முன்னிட்டு நாடக விழா | கிருஷ்ண கிரி 09.02.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 0.30 |
| 17. | உலக நாட்டிய தினத்தை முன்னிட்டு நாட்டிய விழா | கரூர் 13.02.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப் பள்ளி | 1.50 |
| 18. | மாண்புமிகு பாரதப் பிரதமர் வருகை கலை நிகழ்ச்சிகள் | கோயம் புத்தூர் 25.02.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 2.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 19. | மாவட்ட கிராமியக் கலை விழா | ஈரோடு 26.02.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம் புத்தூர் | 1.30 |
| 20. | ஓவிய / சிற்பக் கண்காட்சி | ஈரோடு 26.02.2021 மற்றும் 27.02.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம் புத்தூர் | 1.00 |
| 21. | உலக நாடக தினம் மற்றும் உலக நாட்டிய தினம் நிகழ்ச்சிகள் | ஈரோடு 26.02.2021 மற்றும் 27.02.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம் புத்தூர் | 0.65 |
| 22. | இந்திய சுதந்திரத்தின் 75 வது ஆண்டு கொண்டாட் டம் | சென்னை, வேலூர், திருச்சிராப் பள்ளி 12.03.2021 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | 6.72 |
| | தஞ்சாவூர் திருவையாறு | 13.03.2021 | | |
| | வேதாரண்யம் | 14.03.2021 | | |
| | மதுரை | 25.03.2021 | | |
| | கோயம்புத்தூர் | 30.03.2021 | | |
| | திருவையாறு | 08.04.2021 | | |
| | சென்னை | 12.04.2021 | | |
| | தூத்துக்குடி | 22.04.2021 | | |
| | சிவகங்கை | 28.04.2021 | | |
| | புதுக்கோட்டை | 30.04.2021 | | |

## 1.17. தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்து நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள் – 2020–2021

| வ. எண் | கலை நிகழ்சசிகள் | நிகழ்விடம் மற்றும் நாள் | நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு |
|---|---|---|---|
| 1. | நவராத்திரி விழா | சேலம் 15.10.2020 முதல் 26.10.2020 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் |
| 2. | வைகுண்ட ஏகாதசி விழா | திருவரங்கம் 22.12.2020 முதல் 24.12.2020 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி |
| 3. | கிராமியக் கலை பயிற்சி பம்பையாட்டம் | கிருஷ்ணகிரி 05.01.2021 முதல் 07.01.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் |
| 4. | கிராமியக் கலை பயிற்சி கைச்சிலம் பாட்டம் | தருமபுரி 06.01.2021 முதல் 08.01.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் |
| 5 | மத நல்லிணக்க விழா | நாமக்கல் 09.01.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் |
| 6. | கிராமியக் கலை பயிற்சி நையாண்டி மேளம் | நாமக்கல் 08.01.2021 முதல் 10.01.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் |
| 7. | கிராமியக் கலை பயிற்சி இசை நாடகம் | சேலம் 09.01.2021 முதல் 11.01.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் |

| | | | |
|---|---|---|---|
| 8 | கிராமியக் கலை பயிற்சி கைச்சிலம் பாட்டம் | காஞ்சிபுரம் 25.01.2021 முதல் 27.01.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் |
| 9. | கிராமியக் கலை பயிற்சி கரகாட்டம் தப்பாட்டம் வில்லுப்பாட்டு ஜிம்ப்ளா மேளம் சிலம்பாட்டம் | திருநெல்வேலி விருதுநகர் தென்காசி தூத்துக்குடி கன்னியாகுமரி 28.01.2021 முதல் 31.01.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி |
| 10. | கிராமியக் கலை பயிற்சி துடும்பாட்டம் | திருச்சிராப்பள்ளி 02.02.2021 முதல் 04.02.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி |
| 11. | கிராமியக் கலை பயிற்சி இசை நாடகம் | புதுக்கோட்டை 03.02.2021 முதல் 05.02.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி |
| 12. | கிராமியக் கலை பயிற்சி துடும்பாட்டம் | பெரம்பலூர் 05.02.2021 முதல் 07.02.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி |
| 13. | கிராமியக் கலை பயிற்சி தெருக்கூத்து | பட்டரைப் பெரும்புதூர் (திருவள்ளூர் ) 08.02.2021 முதல் 10.02.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் |
| 14. | கிராமியக் கலை பயிற்சி நையாண்டி | தஞ்சாவூர் திருவாரூர் நாகப்பட்டினம் | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் |

| | | | |
|---|---|---|---|
| | மேளம்<br>கரகாட்டம்<br>தப்பாட்டம்<br>வில்லுப்பாட்டு<br>தெருக்கூத்து | கடலூர்<br>விழுப்புரம்<br>12.02.2021 முதல்<br>14.02.2021 வரை | |
| 15. | கிராமியக் கலை பயிற்சி<br>தெருக்கூத்து | திருப்பத்தூர்<br>13.02.2021 முதல்<br>15.02.2021 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் |
| 16. | பாவை விழா | ஸ்ரீ வில்லி புத்தூர்<br>26.02.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி |
| 17. | ஆழித்தேர் திருவிழா | திருவாரூர்<br>23.03.2021<br>மற்றும்<br>24.03.2021 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் |

## 1.18. முடிவுரை

கலை பண்பாட்டுத் துறை கலை நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம், பல்வேறு கலைப்பிரிவுகளைச் சார்ந்த கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்க வாய்ப்பளித்தும் சிறந்த கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவித்தும் வருகிறது. நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி அவர்களுக்கு சமூக பாதுகாப்பினை வழங்கிடவும், பல்வேறு கலைகளை

பாதுகாத்து, வளர்த்து இளம் தலைமுறையினருக்கு கொண்டு செல்வதற்கும், இத்துறையால் அனைத்து நடவடிக்கைளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 8.06.2021 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு மாதந்திர நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நிதியுதவி ஆணைகளை வழங்கினார்கள்.




நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு மாதந்திர நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட 1000 பயனாளிகளில் 11 கலைஞர்களுக்கு நிதி ஒப்பளிப்பு ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.06.2021 அன்று வழங்கினார்கள்.




சென்னையில் 12.03.2021 அன்று நடைபெற்ற இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு கொண்டாட்டங்களின் தொடக்க விழாவில் கலை பண்பாட்டுத்துறை சார்பில் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.




சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் 12.04.2021 அன்று நடைபெற்ற இந்திய சுதந்திரத்தின் 75– வது ஆண்டு "அமுதப் பெரு விழாவில்" நாட்டிய நிகழ்ச்சி.




உலக நாட்டியத் தினத்தினை முன்னிட்டு கரூரில் 13.02.2021 அன்று மண்டலக் கலை பண்பாட்டு மையம் திருச்சிராப்பள்ளி சார்பில் நாட்டிய விழா நடத்தப்பட்டது.




ஈரோட்டில் 26.02.2021 அன்று மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் சார்பில் நடைபெற்ற மாற்று திறனாளிகள் கலை விழாவில் இசை நிகழ்ச்சிகள்  நடத்தப்பட்டன.




திருவள்ளூர் மாவட்டம் பட்டரை பெரும்புதூரில் தென்னக பண்பாட்டு மையம், தஞ்சாவூர் மற்றும் மண்டலக் கலை பண்பாட்டு மையம் காஞ்சிபுரம் இணைந்து நடத்திய கிராமியக் கலை பயிற்சி முகாமின் நிறைவு விழாவில் 10.02.2021 அன்று கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.



புதுடெல்லி பாரத்பர்வ் 2021 இணைய வழி நிகழ்ச்சிகளுக்காக திருச்சிராப்பள்ளியில் 15.01.2021 அன்று கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.




புதுடெல்லி பாரத்பர்வ் 2021 இணைய வழி நிகழ்ச்சிகளுக்காக திருச்சிராப்பள்ளியில் 15.01.2021 அன்று கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.




கிருஷ்ணகிரியில் 08.01.2021 அன்று சேலம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் சார்பில் கிராமியக் கலைவிழா கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

# அருங்காட்சியகங்கள் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2021 – 2022

## முன்னுரை

2. பன்னாட்டு அருங்காட்சியக அவையம் (ICOM) அருங்காட்சியகங்களை, "சமுதாய வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டிற்காகவும் செயல்படும் பொதுமக்கள் அனைவரும் அணுகத்தக்க வகையிலமைந்த இலாப நோக்கமற்ற நிலையான நிறுவனமாகவும், மானிடத்தின் தொட்டுணரும் மற்றும் தொடவியலா பாரம்பரியக் கூறுகளையும், அவற்றின் சூழல்களையும் சேகரித்தல், பாதுகாத்தல், ஆய்வு மேற்கொள்ளுதல், ஆய்வு முடிவுகளை வெளியிடுதல் மற்றும் காட்சிப்படுத்துதல் போன்ற பணிகளை, கல்வி, ஆய்வு மற்றும் பொழுதுபோக்கிற்காக மேற்கொண்டு வருகிறது" என வரையறை செய்கின்றது.

மனித அனுபவங்களின் வெளிப்பாடாக விளங்கும் அருங்காட்சியகங்களின் சேகரிப்புகள், மனித சிந்தனைகளின் ஒருங்கிணைப்பாக விளங்குகின்றன. தங்களையும் தங்களைச் சுற்றியுள்ள உலகினையும் அறிவின் அடி ஆழம் வரை அறிந்துகொள்ள வார்த்தைகளை விட அரும்

பொருட்களை பயன்படுத்தும்போது உணரலாம். காணும் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் அறிவுசார் தகவல்களை பரப்பும் பணியே இன்றைய அருங்காட்சியகங்களின் தலையாய குறிக்கோளாக உள்ளது. ஊடாடும் தொடர்பு காட்சிப்பொருட்கள் பார்வையாளர்கள் மத்தியில் பங்கேற்பு உணர்வினை ஊக்குவிக்கும் காரணியாக உள்ளன.

அருங்காட்சியகங்கள் மாணவர்களுக்கான கல்வி நிறுவனங்களை முழுமையடையச் செய்கின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியான செல்பேசி செயலிகள், மெய்நிகர் காட்சியமைப்பு, புனைமெய்யாக்கக் காட்சியமைப்பு சமூக வலைதளங்கள் மற்றும் ஊடாடு தகவல்கள் அருங்காட்சியகங்களை உலகின் கடைக் கோடியில் வசிக்கும் ஒரு சாதாரண மனிதனின் வாயிற்கதவு வரை கொண்டு செல்கின்றன.

**துறையின் குறிக்கோள்கள்**

2.1. அருங்காட்சியகத் துறையின் முக்கிய குறிக்கோள்களாவன:

1. கடந்த கால மற்றும் நிகழ்கால அரும்பொருட்களை சேகரித்தல் மற்றும் பாதுகாத்தல்.

2. காட்சிப் பொருட்களை வருங்கால சந்ததிக்காக பாதுகாத்தல்.
3. சேமித்தல் மற்றும் ஆவணப்படுத்தி சான்றாவணம் செய்தல்.
4. ஆய்வு செய்தல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல்.
5. கருத்தியல் சார்ந்த காட்சியமைப்புகள், காலம்சார் மற்றும் சிறப்புக் கண்காட்சிகள் வழியே சேகரிப்புகளை பொதுமக்கள் காண வழிசெய்தல்.
6. கருத்தரங்குகள், பணிப் பட்டறைகள், சொற்பொழிவுகள், பயிற்சிகள் மற்றும் உள்விளக்கப் பயிற்சிகளை நடத்துதல்.

**நிர்வாக அமைப்பு மற்றும் நிதி ஒதுக்கீடு**

2.2. அருங்காட்சியகங்கள் துறையானது, சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் 23 மாவட்ட அருங்காட்சியகங்களைக் கொண்டுள்ளது. அருங்காட்சியகத்துறை, இயக்குநர் அவர்களின் தலைமையில் அவருக்கு உதவியாக இரண்டு உதவி இயக்குநர்கள், காப்பாட்சியர்கள், உதவிக் காப்பாட்சியர்கள், காட்சிக்கூட விளக்குநர்கள் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளது.

## அருங்காட்சியகங்கள் துறை

இயக்குநர் (1)

⇩

உதவி இயக்குநர் (2)

⇩

முதன்மைக் கணக்கு அலுவலர் (1)

⇩

காப்பாட்சியர் (31)

⇩

உதவிக் காப்பாட்சியர் /காட்சிக்கூட விளக்குநர் (10)

⇩

நிர்வாகப் பணியாளர்கள் (37)

⇩

தொழில்நுட்பப் பணியாளர்கள் (57)

⇩

காட்சிக் கூடக் காவலர்/காவலர் (196)

⇩

மொத்தம் (335)

2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.30.28 கோடி ஆகும். மேலும் ஒன்றிய மாநில அரசுகள் நிதியுதவி பெறும்

திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடாக ரூ.5.41 கோடி பெறப்பட்டது.

**அரசு அருங்காட்சியகம், சென்னை**

2.3. சென்னை அரசு அருங்காட்சியகம் தமிழ்நாடு அரசின் மாநில அளவிலான அருங்காட்சியகமாகும். இது கி.பி.1851 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தியாவின் இரண்டாவது பழமையான அருங்காட்சியகமாகும். இது 57 காட்சிக்கூடங்கள் குறிப்பாக தொல்லியல், கலை, மானுடவியல், புவியியல், தாவரவியல், விலங்கியல், நாணயவியல் மற்றும் சிறுவர் அருங்காட்சியகம் ஆகிய 8 பிரிவுகளை கொண்டுள்ளது. மேலும் வேதியியற் பாதுகாப்பு, கல்விப் பிரிவு மற்றும் வடிவமைப்பு பிரிவுகளும் உள்ளன.

உலகப் புகழ் வாய்ந்த அமராவதி சுண்ணாம்புக்கல் சிற்பங்கள் மற்றும் செப்பு படிமங்கள், ராபர்ட் புரூஸ் ஃபூட் அவர்களின் கற்கால கல் ஆயுதங்களின் தொகுப்புகள், ஆதிச்சநல்லூர் பெருங்கற்கால சேகரிப்புகள், பல்வேறு மன்னர் மரபினரின் நாணயங்கள், நீலத் திமிங்கிலத்தின் நீண்ட எலும்புக் கூடு, ராஜா ரவி வர்மாவின் ஓவியங்கள் ஆகியன சென்னை அருங்காட்சியகத்தின் குறிப்பிடத்தக்க சேகரிப்புகளாகும். சிறுவர்

அருங்காட்சியகத்தில் உள்ள ஊடாடும் தொடர்பு காட்சியமைப்புகள், புவியியல் பிரிவில் உள்ள சுவாரசியமான ரோபாடிக் டைனோசர் போன்றவை சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளன. விலங்கியல் மற்றும் தாவரவியல் கூடங்கள் மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு தகவல்களை அள்ளித் தரும் புதையல் பேழையாக விளங்குகின்றன.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பார்வையற்றோருக்கு உதவும் பாதை வசதி, பிரெய்லி எழுத்து வடிவ முறை, படிக்கட்டு மின்தூக்கிகள், மற்றும் சக்கர நாற்காலிகள் போன்ற வசதிகள் மாற்றுத் திறனாளி பார்வையாளர்களும் காட்சிக்கூடங்களை எளிதில் சுற்றிவர அமைக்கப்பட்டுள்ளன. அருங்காட்சியகமானது, அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் தொடர்ந்து பார்வையாளர்களுக்கு வசதிகளை மேம்படுத்தி வருகிறது.

**மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள்**

2.4. தமிழ்நாட்டில் 23 மாவட்ட அருங்காட்சியகங்கள், புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், நீலகிரி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி,

திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி (திண்டுக்கல்), நாகப்பட்டினம், காஞ்சிபுரம், ராமநாதபுரம், கரூர், விருதுநகர், தேனி, திருவண்ணாமலை மற்றும் அரியலூர் புதையுயிரி படிவ அருங்காட்சியகம் ஆகியவை தமிழக அரசு அருங்காட்சியகங்கள் துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கடலூர் மற்றும் நீலகிரி அரசு அருங்காட்சியகங்கள் பாரம்பரியக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

### 2.5. பல்வேறு பணிகளின் விவரங்கள்

- தாகூர் பண்பாட்டு வளாக மேம்பாட்டு நிதியின் கீழ் ஒன்றிய அரசு நிதிப் பங்கீட்டில் சென்னை அரசு அருங்காட்சியக கலையரங்கத் தொகுப்பின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.24.56 கோடி மதிப்பீட்டிலான முன்மொழிவு ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
- சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ரூ.4.81 கோடி மதிப்பீட்டில் புதிய நிர்வாகக் கட்டட கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

- சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள ஒரு பாரம்பரிய கட்டடத்தை மீட்டுருவாக்கி பாரம்பரிய உணவகம் ரூ.2.81 கோடி செலவில் அமைப்பதற்கான பணிகள் துவங்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.
- சென்னை அரசு அருங்காட்சியக பாந்தியன் முதன்மை கட்டடத்தை (கி.பி.1780) முழுமையாக மீட்டுருவாக்கி புவியமைப்பியல், விலங்கியல், தாவரவியல் மற்றும் தொல்லியல் காட்சிக்கூடங்களை மேம்படுத்துவதற்கான மூன்றாண்டுத் திட்ட மதிப்பீடான ரூ.30 கோடியில் மூன்று வருடத் தவணைகளில் முதல் வருடத் தவணையாக ரூ.10.82 கோடி வழங்க அனுமதி அளித்து அதில், ரூ.5.41 கோடியினை ஒன்றிய அரசு விடுவித்துள்ளது. ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளது.
- அரியலூர் புதையுயிரி படிவ அருங்காட்சியக வளாகத்தில் உள்ள புதையுயிரி தளத்தின் இரு பக்கங்களில் சுற்றுச் சுவர் ரூ. 1 கோடி செலவில் அமைப்பதற்கான பணிகள் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- 3 மாவட்ட அரசு அருங்காட்சியகங்களுக்கு புதிய கட்டடம் கட்டி, அருங்காட்சியகத்தை மாற்றியமைக்க தொடராச் செலவினமாக ரூ.16 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் சேலம் அருங்காட்சியகம் கட்ட ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட அருங்காட்சியகங்களுக்கான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## வெளியீடுகள்

2.6. அரசு அருங்காட்சியகம், சென்னை, தொல்பொருள், மானுடவியல், கலை, தாவரவியல், புவியியல், அருங்காட்சியகவியல், நாணயவியல், விலங்கியல், வேதியியல் பாதுகாப்பு போன்ற பல்வேறு துறைகளில் வெளியீடுகளை வெளியிட்டுள்ளது. புகழ்பெற்ற அருங்காட்சியகத்தின் சேகரிப்புகளிலிருந்து தொல்பொருட்கள் மற்றும் இயற்கை வரலாற்றுப் பொருட்கள் குறித்து வெளியிடப்பட்ட கணிசமான ஆராய்ச்சிகளின் விளைவாக, வெளியீடுகள் முழு உலகிற்கு குறிப்புப் புத்தகங்களாக விளங்கி வருகின்றன.

தென்னிந்திய இந்து உலோகப் படிமங்களின் பட்டியல், திருவண்ணாமலையின் கோபுரங்கள், ஆதிச்சநல்லூர் மற்றும் பெரும்பைர் வரலாற்றுக்கு முந்தைய தொல்பொருட்களின் பட்டியல் போன்ற படைப்புகள் மிகவும் விரும்பப்படும் புத்தகங்களாக விளங்குகின்றன.

அருங்காட்சியக கலைப்பொருட்களின் இரசாயன பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நுட்பங்கள் குறித்த பல படைப்புகள் தொல்பொருட்களின் பாதுகாப்புத்துறையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு மிகுந்த மதிப்புடையவையாக உள்ளன.

இதுவரை, 183 அருங்காட்சியக வெளியீடுகள் தேடக்கூடிய கையடக்க ஆவண வடிவமைப்பில் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு, அவற்றை எளிதில் அணுகுவதற்காக அருங்காட்சியகத் துறையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் பதிவேற்றப்பட்டு வருகின்றன.

**தொன்மை வாய்ந்த அரும்பொருட்களின் சமீபத்திய சேகரிப்புகள்**

2.7. 2020–2021 ஆம் ஆண்டில் அருங்காட்சியகத் துறையில் ஏராளமான அரும்பொருட்கள் பெறப்பட்டுள்ளன.

**அரசு அருங்காட்சியகம், சென்னை**

2.8. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், காலேகுண்டா கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட ஆஞ்சநேயர் படிமம் மற்றும் சூளகிரி வட்டம், உத்தனப்பள்ளி கிராமத்திலிருந்து நரசிம்மர் படிமம், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில் இருந்து வலம்புரி சங்கு மற்றும் விஷ்ணு சிலை ஆகியவை சென்னை அரசு அருங்காட்சியக தொல்பொருள் பிரிவில் புதை பொருட்களாக பெறப்பட்டன.

**மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள்**

2.9. வேலூர் மாவட்ட அருங்காட்சியகத்திற்காக தட்சிணாமூர்த்தி மற்றும் பிரம்மா கற்சிற்பங்கள் புதைபொருட்களாக பெறப்பட்டன. திருநெல்வேலி மாவட்ட அருங்காட்சியகத்தில் பைரவர், கருப்பசாமி, நாகக்கல், நந்தி, முருகர் மற்றும் விநாயகர் கற்சிலைகள் புதியதாக சேகரிக்கப்பட்டன. திருச்சி மாவட்ட அருங்காட்சியகத்திற்காக வீரன் மற்றும் விநாயகர் கற்சிலைகள் புதைப்பொருட்களாக பெறப்பட்டன. தேவி கற்சிலை மற்றும் ஒரு கல்வெட்டு விருதுநகர் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் பெறப்பட்டன.

கருங்கல் பைரவர் சிலை, தலையில்லா புத்தர் சிலை, சிவலிங்கம், 14 ஆம் நூற்றாண்டின் சுகாசனர், 19 ஆம் நூற்றாண்டின் தெய்வானையுடன் முருகன் (உடைந்த நிலையில்), விநாயகர் மற்றும் தட்சிணாமூர்த்தி ஆகியவை நாகப்பட்டினம் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் பெறப்பட்டன.

**தற்போது நடைபெற்று வரும் திட்டப் பணிகள்**

2.10. திருச்சி மாவட்ட அருங்காட்சியகத்தின் முழுமையான மேம்பாடு ரூ.3.75 கோடி செலவில் துவக்கப்பட்டு முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்சுற்று தொலைக்காட்சிகள் மற்றும் பல்வேறு பாதுகாப்பு மேலாண்மை கட்டுப்பாட்டு அமைப்புகள் (Security Management Control System – SMCS) ரூ.2.5 கோடி செலவில் எல்காட் நிறுவனத்தின் மூலம் நிறுவ ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது.

**கல்விப்பணிகள் – 2020–21**

2.11. அருங்காட்சியகத்துறை, மாணவர்கள், ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்ய தொடர்ந்து பல்வேறு கல்விப்பணிகளை மேற்கொண்டுள்ளது. சொற்பொழிவுகள், உள்விளக்கப் பயிற்சிகள்,

பணிப்பட்டறைகள், பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றை நடத்துகிறது. அருங்காட்சியகம் மற்றும் அதன் சேகரிப்புகளைப் பாராட்டவும் புரிந்துகொள்ளவும் மாணவர்களை ஆக்கப்பூர்வமாகவும் திறமையாகவும் ஈடுபடுத்த ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இந்த அருங்காட்சியகம் ஆராய்ச்சியாளர்கள், முதுகலைப் பட்டதாரிகள் மற்றும் இளங்கலை பட்டதாரிகளுக்கு சேகரிப்புகளை ஆராய்ச்சி செய்ய, அருங்காட்சியக நடைமுறைகளைப் பற்றி அறிய உள்விளக்கப் பயிற்சிகள் மற்றும் தொழில்முறை திறன்களைப் பெற பயிற்சிகள் வழங்குகிறது. சென்னை அரசு அருங்காட்சியகம் 2020 – 2021 ஆம் ஆண்டில் பின்வரும் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது:–

- 08.05.2020 முதல் 15.05.2020 வரை பன்னாட்டு அருங்காட்சியக தினத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கு இணைய வழியில் ஓவியப் போட்டி நடைபெற்றது.
- வனவிலங்கு வார விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக 17.10.2020 அன்று "நகர்ப்புற வன விலங்குகள்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது.

- சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 19.10.2020 முதல் 24.10.2020 வரை 6 நாட்கள் இணைய வழி கல்வெட்டுப் பயிற்சி நடத்தப்பட்டது. இதில் பல்வேறு நாடுகளைச் சார்ந்த 643 நபர்கள் இணைய வழியில் பங்கேற்றனர்.
- 28.02.2021 அன்று சிறுவர்களுக்கு பல்வேறு தலைப்புகளில் ஓவியப் போட்டிகள் நடைபெற்றன.
- 182 மாணவர்களுக்கு தொல்லியல், நாணயவியல், மானுடவியல், வேதிய பாதுகாப்பு, விலங்கியல், புவியியல் மற்றும் தாவரவியல் பிரிவுகளில் உள்விளக்கப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- அருங்காட்சியகத்தின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு முக்கிய அரும்பொருளை சிறப்பிக்கும் வகையில், சிறப்பு 'வாரக் கண்காட்சிகள்' முதன்மைக் கட்டடத்தில் நடத்தப்பட்டுள்ளன.
- 29.03.2021 அன்று "**ஆதிச்சநல்லூரும் தன்பொருநை நதிக்கரை அகழாய்வுகளும்**" என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது.

- 30.03.2021 அன்று "**சங்க இலக்கியங்கள் காட்டும் தன்பொருநை நதிக்கரை பண்பாடு**" என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது.

மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள் பின்வரும் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளன:–

- பன்னாட்டு அருங்காட்சியக தினம், சுற்றுலா தினம், யோகா தினம், சுதந்திர தினம், குடியரசு தினம், சுற்றுச்சூழல் தினம், அறிவியல் தினம், சிறுவர் தினம், தபால்தலை தினம் போன்ற சிறப்புக் கொண்டாட்ட நாட்கள் மாவட்ட அருங்காட்சியகங்களில் அனுசரிக்கப்பட்டன. போட்டிகள், சிறப்புக் கண்காட்சிகள், பாரம்பரிய நடைகள், தொழிற்பட்டறைகள் மற்றும் கோடைக்கால முகாம்கள் ஆகிய பல நிகழ்வுகள் பார்வையாளர்களையும் மாணவர்களையும் ஈர்க்கும் வகையில் நடத்தப்பட்டன. மேலும், கல்வெட்டுப் பயிற்சி, ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு பற்றிய பயிற்சிகள் மற்றும் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. 75 ஆவது இந்திய சுதந்திர தின விழாக் கொண்டாட்டங்கள் தொடர்பாக மாவட்ட அருங்காட்சியகங்களில் ஓவியப் போட்டிகள்,

பேச்சுப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 2.12. முக்கிய சாதனைகள் 2020-2021

- 2018-2019 ஆம் நிதியாண்டில் தேனி மற்றும் திருவண்ணாமலை ஆகிய இரு மாவட்டங்களில் ரூ.2.60 கோடி செலவில் புதிய அரசு அருங்காட்சியகங்கள் அமைக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு அதற்கான அருங்காட்சியக காட்சியமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு பொது மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன.
- புதுக்கோட்டை, திருநெல்வேலி, திருச்சிராப் பள்ளி மற்றும் நீலகிரி ஆகிய நான்கு மாவட்ட அரசு அருங்காட்சியகங்களின் பாரம்பரிய கட்டடங்களை முழுமையாக மீட்டுருவாக்கம் செய்யவும் மற்றும் காட்சியமைப்புகளை மேம்படுத்தவும் ரூ. 5.58 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு நீலகிரி, புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி அரசு அருங்காட்சியகங்களில் அதற்கான பணிகள் நிறைவுற்றுள்ளன. திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் பார்வையாளர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், நடைபாதைகள், மின் விளக்குகள், உட்புறச் சாலைகள், மியூசியம் பிளாசா மற்றும் திறந்த வெளிக் கலையரங்கம் (Amphitheatre) அமைக்க ரூ.11.70 கோடி செலவில் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB– Infrastructure Development Investment Programme for Tourism) அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் அனைத்துக் காட்சிக் கூடங்களுக்கான மின்வடங்கள் புதியதாக அமைக்கப்பட்ட நிலத்தடி மின் வட பாதையில் பொருத்தும் பணிகள் ரூ.94 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சென்னை அரசு அருங்காட்சியக காட்சிக் கூடங்களில் ரூ.1 கோடி செலவில் புனை மெய்யாக்கம் (Augmented Reality) மெய்நிகர் காட்சி (Virtual Reality) மற்றும் உடல் அசைவுகள் அடிப்படையிலான தொழில்நுட்ப அமைப்புகள் (Touch based Technology Solution) நிறுவப்பட்டுள்ளன.

- சென்னை அரசு அருங்காட்சியகத்தில் காணொலிக் காட்சி திரைகள் (Video Wall) ரூ. 1 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன.
- ரூ.70 இலட்சம் செலவில் சிற்பப் பூங்காக்களை மேம்படுத்தும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.
- ரூ.70 இலட்சம் செலவில் சென்னை அரசு அருங்காட்சியக படிமங்கள் காட்சிக் கூடத்தில் குளிர்சாதன (Air–conditioner) வசதிகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

2.13. அருங்காட்சியகங்கள் என்பது, உலகின் இயற்கை வரலாறு, பண்பாட்டின் வரலாறு மற்றும் மனித இனத்தின் கலை, அறிவியல், தொழில்நுட்ப சாதனைகளை மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் தனித்தன்மை மிக்க நிறுவனமாக விளங்குகிறது. வேறுபட்ட வயது, ஆர்வம், பின்புலம் மற்றும் திறமைகளை உடையவர்கள் தாங்களாகவே அறிந்து கொள்கின்ற விதத்திலான கல்வி நிறுவனமாக சுயகற்றலை ஊக்குவிக்கும் வாய்ப்பினை அருங்காட்சியகம் தருகிறது.

உள்ளூர் பண்பாட்டினை வளப்படுத்தவும், வசிப்பதற்கும், சுற்றிப் பார்ப்பதற்கும் சிறப்புடைய இடங்களை சமுதாயம் அறிந்து கொள்ளவும், அருங்காட்சியகங்கள் உதவுகின்றன. பழமையையும் புதுமையையும் இணைத்து, பண்பாடு மற்றும் பாரம்பரிய சான்றுகளை பாதுகாத்து, வரும் சந்ததியினருக்கு வழங்கும் பணியை அருங்காட்சியகம் செய்கிறது.



திருவண்ணாமலை மாவட்டத்தில் புதிய அருங்காட்சியகம் ரூ.1.30 கோடி செலவில் திறந்து வைக்கப்பட்டது.



தேனி மாவட்டத்தில் புதிய அருங்காட்சியகம் ரூ.1.30 கோடி செலவில் திறந்து வைக்கப்பட்டது.



சென்னை அரசு அருங்காட்சியகத்தில் மெய்நிகர் காட்சி மற்றும் உடல் அசைவுகள் அடிப்படையிலான தொழில்நுட்ப அமைப்புகள் ரூ.1 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளது.



சென்னை அரசு அருங்காட்சியக சிறுவர் அருங்காட்சியகத்தில் நேரடி புனை மெய்யாக்க காட்சியமைப்பு ரூ.50 இலட்சம் செலவில் திறந்து வைக்கப்பட்டது.



மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாடு தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் அரசு முதன்மை செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை 09.08.2021 அன்று சென்னை, அரசு அருங்காட்சியக படிமக்கூடத்தை ஆய்வு செய்தனர்.



மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாடு. தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் அரசு முதன்மை செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை 09.08.2021 அன்று சென்னை, அரசு அருங்காட்சியகத்தில் 1780 ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ள பாந்தியன் கட்டடத்தை மீட்டுருவாக்கும் திட்டப் பணி குறித்து ஆய்வு செய்தனர்.



இராஜா ரவிவர்மா வரைந்த சகுந்தலை எண்ணெய் ஓவியம்.



புத்தர், நளகிரி என்ற யானையை பணிய வைத்தலை சித்தரிக்கும் கி.பி. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அமராவதி சுண்ணாம்புக் கல் சிற்பம்.



திருவெண்காடு, மயிலாடுதுறை மாவட்டத்தில் கிடைக்கப் பெற்ற கி.பி.11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அர்த்தநாரீஸ்வரர் ஐம்பொன் சிலை.



திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவானைக்காவலில் கிடைத்த தங்க நாணயங்கள் புதையல்

## தொல்லியல் துறை
## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 – 2022

### 3. முன்னுரை

பண்டைய மக்களின் பண்பாடு மற்றும் நாகரிகத்தினை அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்களை அடையாளம் கண்டு மீட்டெடுத்தல் மற்றும் முறையான பகுப்பாய்வுக்கு உட்படுத்தி அணுகுமுறையுடன் உரிய விளக்கங்களை ஆய்வியல் சார்ந்து அளிக்கும் புலம் தொல்லியல் ஆகும். அன்றைய காலகட்டத்தின் பண்டையப் பண்பாடு மற்றும் சமூகத்தினை அறிந்து கொள்வதற்கும் மீள் உருவாக்கம் செய்வதற்கும் துணை புரிகிறது. 'Archaeology' என்ற சொல் கிரேக்கச் சொல்லில் இருந்து உருவானது. கிரேக்கத்தில் *archaeos* என்பது பழமை எனவும், *logos* என்பது ஒரு பொருளைப் பற்றிப் படித்தல், விவாதித்தல், காரணத்தைக் கண்டறிதல், அறிவியல் என்றும் பொருள் கூறுகிறது.

### துறையின் நோக்கங்கள்

3.1. மாநில தொல்லியல் துறையானது பின்வரும் நோக்கங்களுக்காக 1961–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது:–

- பண்டைய மற்றும் வரலாற்றுத் தொன்மை வாய்ந்த சின்னங்களைக் கண்டறிதல், புனரமைத்தல் மற்றும் பாதுகாத்தல்.
- மாநிலம் முழுவதும் உள்ள தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் நடத்துதல்.
- கல்வெட்டுகளைப் படியெடுத்தல், படித்துப் பொருளறிதல், நூலாக்கம் செய்து ஆவணப்படுத்துதல்.
- அகழ்வைப்பகங்களை அமைத்தல்.

**நிர்வாக அமைப்பு**

3.2. தொல்லியல் துறையானது தொல்லியல் துறை இயக்குநரின் தலைமையின் கீழ், துணை இயக்குநர், தொல்லியல் துணை கண்காணிப்பாளர், உதவி செயற்பொறியாளர், உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர், மண்டல உதவி இயக்குநர்கள், மற்றும் தொல்லியல் அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகின்றது.

தொல்லியல் துறையை வலுப்படுத்தவும், தனித்துவமாக அகழாய்வுப் பிரிவினை ஏற்படுத்தவும் ஓர் இணை இயக்குநர், மூன்று மண்டல உதவி

இயக்குநர்கள், ஐந்து தொல்லியல் அலுவலர்கள், ஒரு செயற்பொறியாளர், இரண்டு உதவி செயற்பொறியாளர்கள், நான்கு இளநிலை பொறியாளர்கள், ஓர் இளநிலை மின்–பொறியாளர், நான்கு ஸ்தபதிகள், ஒரு துணை இயக்குநர் (நிர்வாகம்), இரண்டு உதவி இயக்குநர்கள் (நிர்வாகம்) என 24 பணியிடங்கள் அரசால் புதியதாக தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

**வரலாற்றை மீட்டுருவாக்கல்**

3.3. மத்திய தொல்லியல் ஆலோசனை வாரியம், (CABA) 2017–2018, 2018–2019, 2019–2020 மற்றும் 2020–2021 ஆகிய ஆண்டுகளில் சிவகங்கை மாவட்டம், கீழடியில் அகழாய்வுகள் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு தொல்லியல் துறைக்கு அனுமதி அளித்துள்ளது.

கீழடியில் சேகரிக்கப்பட்ட கரிம மாதிரியை பகுப்பாய்வுக்கு உட்படுத்தியதில் இதனின் காலம் கி.மு. 6–ஆம் நூற்றாண்டு (கி.மு.580) என கால வரையறை செய்யப்பட்டுள்ளது. இதுவரை தமிழி (தமிழ்–பிராமி) வரிவடிவத்தின் காலம் கி.மு.5–ஆம் நூற்றாண்டு என்று கருதப்பட்டு வந்த நிலையில், அதற்கு மாறாக மேலும் ஒரு நூற்றாண்டு காலம்

முன்னோக்கி எடுத்துச் செல்லப்பட்டு கி.மு. 6–ஆம் நூற்றாண்டு என நிறுவப்பட்டுள்ளது. கி.மு. ஆறாம் நூற்றாண்டளவிலேயே தமிழகம் எழுத்தறிவு பெற்ற சமூகமாக விளங்கியிருப்பதற்கு கீழடி கரிம காலப் பகுப்பாய்வு முடிவு சான்றாக அமைகிறது.

இந்தியாவில் கங்கைச் சமவெளி பகுதியில் கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் தோன்றிய இரண்டாம் நகரமயமாக்கம் தமிழகத்தில் காணப்படவில்லை என்ற கருதுகோள் இதுவரை அறிஞர்களிடையே நிலவி வந்தது. ஆனால் கீழடி அகழாய்வு கி.மு.ஆறாம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் நகரமயமாக்கம் உருவாகிவிட்டதை நமக்கு உணர்த்துகிறது.

**பாதுகாக்கப்பட்டச் சின்னங்களைப் பாதுகாத்தல்**

3.4. தமிழ்நாடு பல்வேறு பண்பாட்டு அடையாளங்களுக்கு புகழ்பெற்றது. கோயில்கள், அரண்மனைகள், கோட்டைகள், நீர்நிலைகள், சத்திரங்கள் மற்றும் மண்டபங்கள் கட்டப்பட்டவை குறித்து இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுகள் மூலம் மிகுதியானச் சான்றுகளை நாம் பெற்றுள்ளோம். இவை இயல்பாக சமயம் மற்றும் சமயம் சாராதவையாக உள்ளன. இயற்கைச் சீற்றங்கள் இயற்கைக்கு மாறான நிகழ்வுகள் போன்ற பல்வேறு காரணங்களால்

கோயில்கள் மற்றும் இதர கட்டடங்கள் சேதமடைகின்றன. எனவே, தற்போது இவற்றிற்கு முறையான பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு அவசியமாகிறது.

பண்டைய மரபுசார் கட்டடங்கள், தொல்லியல் சார் இடங்கள் மற்றும் அதன் எச்சங்களில் பாதுகாப்பு மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்வது சிறப்புத் தன்மை வாய்ந்தவை. மேலும், தொல்லியல் நெறிமுறைகள் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றுதலும் அவசியமாகும். மாநிலத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்களை பாதுகாத்து புனரமைப்பு செய்வதற்கு தமிழ்நாடு அரசு, 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு புராதனச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம் மற்றும் 1971–ஆம் ஆண்டு விதிகளை இயற்றியுள்ளது.

மேற்கண்ட சட்டம் மற்றும் விதிகளின்படி வரலாற்றுச் சின்னம் என்பது நூறு ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்று, தொல்லியல் அல்லது கலை மதிப்புகளை உள்ளடக்கிய, எந்தவொரு கட்டுமானம் அல்லது சின்னம், மண்மேடு அல்லது ஈமக்காடு, குகை மற்றும் பாறைச் சிற்பங்கள், கல்வெட்டுகள் அல்லது ஒற்றைக்கல் நினைவுச் சின்னம் ஆகியவற்றைக் குறிப்பதாகும்.

மாநில தொல்லியல் துறை இதுவரை, 94 பண்டைய மற்றும் வரலாற்றுச் சின்னங்களை பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களாக அறிவித்துள்ளது. இந்திய தொல்லியல் துறை (ASI) 251 சின்னங்கள் மற்றும் 160 தொல்லியல் இடங்கள் என ஆக மொத்தம் 411 வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்களை பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்களாக அறிவித்துள்ளது.

94 வரலாற்றுச் சின்னங்களுள், முக்கியத்துவம் மிக்க சுற்றுலா ஆர்வமுள்ள இடங்களாக மதுரை மாவட்டத்திலுள்ள திருமலை நாயக்கர் அரண்மனை, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமலிங்கவிலாச அரண்மனை, மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம் பாடியிலுள்ள டேனிஷ் கோட்டை, கவர்னர் மாளிகை மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், சரபேந்திரராஜ பட்டினத்திலுள்ள மனோரா நினைவுத் தூண் ஆகியவை திகழ்கின்றன.

அண்மையில், அரியலூர் மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், இளையபெருமாள்நல்லூர் கிராமத்திலுள்ள யானைச் சிற்பம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், கீழ்ராவந்தவாடி கிராமத்திலுள்ள சிற்பக்குளம்

(அம்மாகுளம்) ஆகியவை பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களின் பட்டியலில் புதியதாக இணைக்கப் பெற்றுள்ளன.

இவை தவிர, பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படுவதற்காக 63 வரலாற்றுச் சின்னங்கள் தொல்லியல் துறையால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

**பாதுகாக்கப்பட்டச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கான நிதி**

3.5. தமிழ்நாடு அரசு பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களில் தொடர் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஒதுக்கப்பட்ட ரூ.1 கோடியினை ரூ.2 கோடியாக உயர்த்தி வழங்கியுள்ளது. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில், ரூ.1.68 கோடி நிதியில் முகப்பு விளக்குகள் மற்றும் உட்புற விளக்குகள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவில் நிறைவடையவுள்ளன.

**ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

3.6. ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒரு துணைத் திட்டமான, தமிழ்நாடு சுற்றுலா உட்கட்டமைப்பு மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம் (IDIPT–TN) வரலாற்று

முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகளுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது.

ஆசிய வளர்ச்சி வங்கி துணைத் திட்டம் IV–இன் கீழ், ரூ.18.32 கோடி மதிப்பீட்டில் தொல்லியல் துறையின் 12 பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களில் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு பணிகள் முடிக்கப் பெற்றுள்ளன.

**திறன் மேம்பாடு**

3.7. தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை கண்டறிவது குறித்து புவியியல் மற்றும் சுரங்கத் துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கு **"Identifying Archaeologically Important Sites"** என்ற தலைப்பில் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிலரங்கத்தில், தொல்லியல் வல்லுநர்களைக் கொண்டு தொல்லியல் சார்ந்த இடங்களையும், பாதுகாக்கப்பட்ட தொல்லியல் சின்னங்களையும் மற்றும் அவற்றினைப் பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்தும் விளக்கக் காட்சிகளோடு விவரிக்கப்பட்டன.

பண்டைய மற்றும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பாதுகாக்கப்பட்ட தொல்லியல் நினைவுச் சின்னங்களைக் கொண்ட மலைப் பகுதிகளை குவாரி

மற்றும் சுரங்க குத்தகைக்கு வழங்குவதற்கு முன்னர் தொல்லியல் குறித்தான விழிப்புணர்வு, செறிவான பின்புலம் மற்றும் முக்கியத்துவம் பற்றிய புரிதல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள பண்டைய மற்றும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தொல்லியல் சின்னங்களுக்கு அலுவலர்கள் களப்பயிற்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

**புத்தாக்கப் பயிற்சி**

3.8. இவ்வாண்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 17 தொல்லியல் அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். புதியதாக பணியில் சேர்ந்துள்ள தொல்லியல் அலுவலர்களுக்கு தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள், தொல்லெழுத்துகள் மற்றும் கல்வெட்டுகள், கட்டடக் கலை மற்றும் சிற்பக்கலை, தொன்மை வாய்ந்த சின்னங்களைக் கண்டறிதல், அருங்காட்சியகவியல் போன்ற தொல்லியல் சார்ந்த பல்வேறு பிரிவுகளில் தொல்லியல் வல்லுநர்கள் மற்றும் அறிஞர் பெருமக்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

அகழாய்வில் கண்டெடுக்கப்படும் பண்டைய இனக்கீற்று அமிலத்தை (aDNA) கையாள்வது குறித்து

அனைத்து தொல்லியல் அலுவலர்களுக்கும் "Workshop on Excavation Methods for Ancient DNA (aDNA) Sampling" என்ற தலைப்பில் 21.02.2021 அன்று மதுரையிலுள்ள மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த அறிவியல் அறிஞர்களும் வல்லுநர்களும் செய்முறை விளக்கங்களோடு பயிற்சி அளித்தனர்.

**தொல்லியல் அகழாய்வுகள்**

3.9. தொல்லியல் அகழாய்வு என்பது தொல்லியல் எச்சங்களை வெளிப்படுத்துதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பதிவு செய்தல் ஆகும். அகழாய்வு தளம் அல்லது அகழாய்வுக் குழி என்பது ஆய்வுக்கு உட்படுத்தப்படும் பகுதி ஆகும். இப்பகுதியில் ஒரே நேரத்தில் ஒன்று முதல் பல இடங்களில் சில வாரங்கள் முதல் பல ஆண்டுகள் வரை அகழாய்வு நடத்தப்படலாம்.

அகழாய்வு என்பது ஓர் இடத்திலிருந்து பல்வேறு தரவுகளை வெளிக் கொணருதலாகும். தொல்லியல் அகழாய்வு என்பது வெளிக் கொணரப்பட்ட மற்றும் மீட்கப்பட வேண்டிய கலைப் பொருட்கள், சுற்றுச்சூழல் குறித்த சான்றுகள் மற்றும் நிலையான விவரங்களை

பண்பாட்டு அடுக்குகள் வாயிலாக கண்டறிதலாகும். இதன்படி, மண் அடுக்குகளை ஒவ்வொன்றாக மேலிருந்து கீழாக அகற்றுவதின் மூலம் ஒவ்வொரு பண்பாட்டு நிலைகளையும் படிப்படியாக வெளிப்படுத்தி இந்த இடத்தின் வரலாற்றினை அறிய முடியும். இந்த ஆய்வு, முறையாகவும் நுணுக்கமாகவும் நடத்தப்பட வேண்டும். இதன் மூலம் கண்டறியப்படும் சான்றுகள் அனைத்தும் அதன் சூழலின் அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

பல்கலைக் கழகங்கள், தொல்லியலில் ஆய்வு மேற்கொள்ளும் நிறுவனங்கள் போன்ற பல்வேறு துறைகள் மற்றும் முகமைகளிடமிருந்து பெறப்படும் அகழாய்விற்கான முன்மொழிவுகளை மாநில அரசின் பரிந்துரையுடன், ஒன்றிய தொல்லியல் ஆலோசனை வாரிய (CABA) நிலைக் குழுவின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கக் கூடிய ஒருங்கிணைப்பு முகமையாக மாநில தொல்லியல் துறை செயல்பட்டு வருகிறது.

தொல்லியல் துறை, இதுவரை 43 வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்களில் அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளது. அவற்றுள் 37 இடங்களின் அகழாய்வு அறிக்கைகள் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. இந்திய தொல்லியல் துறை

(ASI) மாநிலத்தில் இதுவரை 50–க்கும் மேற்பட்ட இடங்களில் அகழாய்வு மேற்கொண்டுள்ளது.

**கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள்**

3.10. 2019–2020 ஆம் ஆண்டு, தமிழகத்தில் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் விரிவான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள ரூ.2 கோடி தொடரும் செலவினமாக தமிழ்நாடு அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் நான்கு இடங்களில் தொல்லியல் அகழாய்வுகள் நடைபெற்றன:–

1. சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், அகரம், கொந்தகை.
2. தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர்.
3. தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சிவகளை.
4. ஈரோடு மாவட்டத்திலுள்ள கொடுமணல்.

மேலும், புதிய கற்கால இடங்களை கண்டறிய கிருஷ்ணகிரி, வேலூர், தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் ஆகிய மாவட்டங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வு மற்றும் தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகத்தினைக் கண்டறிய

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தொல்லியல் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

**கீழடி மற்றும் இதன் தொகுப்பு (கொந்தகை / மணலூர் / அகரம்)**

3.11. வைகை நதி நாகரித்தை முழுமையான முறையில் ஆய்வு செய்யும் பொருட்டு வாழ்விடம், ஈமக்காடு மற்றும் தொழிற்கூடங்கள் அமைந்த இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கீழடி**

3.12. ஆறாம் கட்ட அகழாய்வில் கிடைக்கப் பெற்ற முக்கிய கட்டுமானங்கள், பல்வேறு நிறம் மற்றும் வகைகளில் பானைகள், உலை, கால்நடை எலும்புகள், எண்ணில்லா இரும்புப் பொருட்கள், அரிய கல்மணிகள், கண்ணாடிகள், சங்குகள் மற்றும் எடைக்கற்கள் முத்திரைகள் மற்றும் தமிழி (தமிழ்–பிராமி) எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், குறியீடுகள் ஆகியவற்றின் மூலம் கீழடியானது, தொழில் நகரம் மற்றும் வாழ்விடப் பகுதியாக அமைந்திருக்கக் கூடும் என்பதனை உறுதிப்படுத்துகிறது. பிற பகுதிகளில் கிடைக்கும் எடைக் கற்கள், முத்திரை மற்றும் அரிய கல்மணிகள், அன்றைய சம காலச் சமூகத்தின் வலுவான வணிக முறையினை சுட்டிக்காட்டுகிறது.

**கொந்தகை**

3.13. கொந்தகை பகுதியானது முழுவதுமாக ஈமச் சின்னங்கள் நிறைந்த ஓர் இடமாக காணப்படுகின்றது. 46 முதுமக்கள் தாழிகளும், ஒரு சவக் குழியும், 17 மேற்பரப்பு அடக்கங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. செவ்வண்ண நிறம் மற்றும் கருப்பு–செவ்வண்ண நிறப் பானைகளுடன் இணைந்து இனம் காணப்பட்டுள்ளன.

**அகரம்**

3.14. அகரத்தில் முதற்கட்ட அகழாய்வு தொடங்கப்பட்டுள்ளது. இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள தொல் பொருட்களில் நுண்கற்காலக் கருவிகளின் கண்டுபிடிப்பு கவனத்திற்குரியது. இங்கு கண்டறியப் பட்டுள்ள கல்லாலான கருவிகள் மற்றும் பிறை வடிவ ஆயுதங்கள் மற்றும் அதனுடன் வெட்டு நுண் கருவிகள் நீக்கப்பட்ட மூலக்கூறு ஆகியவை இங்கு தயாரிக்கப்பட்டவை என்பதை குறிக்கின்றன. பட்டைத் தீட்டப்பட்ட கல்கருவிகள் பல்வேறு வடிவத்தினாலான கருப்பு–செவ்வண்ண நிறப் பானை ஓடுகள், செவ்வண்ண நிறப் பானை ஓடுகள் மற்றும் பழுப்பு நிறப் பானை ஓடுகள், சுடுமண்ணாலான உருவங்கள், சுடுமண் பொருட்கள், பல்வேறு நிறங்களிலான கண்ணாடிப் பொருட்கள், அலங்கரிக்கப்பட்ட சங்குப்

பொருட்கள், செம்பு மற்றும் இரும்பினாலான உலோகப் பொருட்கள் மற்றும் தங்க நாணயம் ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வூர், கோயில் நகரமான மதுரைக்கு மிக அருகிலுள்ள பகுதியாகும். இங்கு வரலாற்றுத் தொன்மை கொண்ட பொருட்கள் கிடைக்கப் பெற்றதன் மூலம், பண்டைய தமிழர் நாகரிகத்தின் பண்பாட்டு வளம் சுட்டிக்காட்டப்படுவதால் கீழடியில் மறைந்துள்ள பண்பாட்டு மதிப்புறுப் பொருட்களை தேடும் பணிகளை எதிர்காலத்தில் தொடர்வதும், பண்டைய சமூகத்தின் பண்பாட்டு வளங்களை வெளிப்படுத்துவதும் காலத்தின் அவசியத் தேவையாகிறது.

**ஆதிச்சநல்லூர், தூத்துக்குடி மாவட்டம்**

3.15. தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றங்கரையின் வலது புறத்தில் ஆதிச்சநல்லூர் அமைந்துள்ளது. 1876–ஆம் ஆண்டு பெர்லின் அருங்காட்சியகத்தைச் சார்ந்த டாக்டர் ஜாகோர் என்பவரால் முதன் முதலில் ஆதிச்சநல்லூரில் மிகப் பெரிய அளவிலான முதுமக்கள் தாழிகளைக் கொண்ட ஈமக்காடு கண்டறியப்பட்டது. அலெக்சாண்டர் ரியா என்பவர் 1903–ஆம் ஆண்டில் அதிக

எண்ணிக்கையிலான முதுமக்கள் தாழிகள் மற்றும் கிரேக்க நாகரித்தின் முக்கிய மையங்களில் ஒன்றான மைசீனாவிற்கு இணையான தங்க நெற்றி பட்டையங்களை கண்டுபிடித்தார்; மேலும், பலவகையான விலங்கு வடிவங்களில் மூடியுடன் அமைந்த வெண்கலப் பொருட்கள், இரும்புப் பொருட்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பானை ஓடுகளையும் கண்டுபிடித்தார். இந்திய தொல்லியல் துறையால் மீண்டும் 2003–2004 மற்றும் 2004–2005 ஆண்டுகளில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 600 சதுர மீட்டர் பரப்பளவில் 160–க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் வெளிக் கொணரப்பட்டன.

தூத்துக்குடி மாவட்டத்தில், ஆதிச்ச நல்லூரிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட இத்தகைய வியத்தகு வாழ்விடப் பகுதியும் வெளிக் கொணரப்பட்ட தொல்பொருட்களும் தமிழக வரலாற்றிலும் அதன் நாகரிகத்திலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

ஈமக்காடு மற்றும் வாழ்விடப் பகுதி என அகழ்வாராய்ச்சிப் பணியானது இரண்டு முக்கிய இடங்களில் நடைபெற்றன. இந்த அகழாய்வில் வெளிக் கொணரப்பட்ட பத்து முதுமக்கள் தாழிகளுள் இரண்டு நல்ல நிலையில் பாதுகாக்கப்பட்டுள்ளன, மீதமுள்ளவை

மண்ணில் புதையுண்டு காணப்படுகின்றன. குறியீடுகளைத் தவிர 680 தொல் பொருட்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**சிவகளை, தூத்துக்குடி மாவட்டம்**

3.16. தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தின் ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் சிவகளை என்னும் கிராமம் உள்ளது. இது தாமிரபரணி ஆற்றின் வடக்குக் கரையில் அமைந்துள்ளது. சிவகளைக்கு மேற்கே 14 கி.மீ. தொலைவில் ஆதிச்சநல்லூர் அமைந்துள்ளது.

பரம்பு மற்றும் வளப்பான்பிள்ளை திரடு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட ஏராளமான பானையோடுகள், இடைக் கற்காலக் கருவிகள் மற்றும் பிற தொல்பொருட்கள் இப்பகுதியின் தொல்லியல் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

சிவகளையில் ஈமக்காடு மற்றும் வாழ்விடப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் 125 தொல் பொருட்கள் மற்றும் மொத்தம் 31 முதுமக்கள் தாழிகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

**கொடுமணல், ஈரோடு மாவட்டம்**

3.17. தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெருந்துறை வட்டத்தில், காவேரி ஆற்றின் துணை

நதியான நொய்யல் ஆற்றின் வடக்குக் கரையில் கொடுமணல் அமைந்துள்ளது. இது சென்னிமலைக்கு மேற்கே 15 கி.மீ. தொலைவிலும் ஈரோட்டில் இருந்து தென்மேற்கே 40 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

சங்க இலக்கிய நூலான **பதிற்றுப்பத்து** கொடுமணல் ஊரினை கொடுமணம் என்றும், இவ்வூர் வணிகம் மற்றும் தொழில் துறை மையமாக விளங்கியது என்றும் எடுத்துரைக்கிறது. இப்பகுதியானது தொன்மை வாய்ந்த வணிகப் பெருவழியில் அமைந்துள்ளது. இது சேரனின் பண்டைய தலைநகரான கரூரை கிழக்கிலும் மேற்கில் பழம்பெரும் முசிறி துறைமுகத்துடனும் இணைக்கிறது.

கணிசமான எண்ணிக்கையில் கருப்பு மற்றும் செவ்வண்ண நிற பானை ஓடுகள் மற்றும் ரஸட் பூசப்பட்ட பானை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அகழாய்வுக் குழிகளில் வெளிப்பட்டுள்ள பெரிய அளவிலான உலை பொருட்கள் இப்பகுதியில் அதிக தொழில்சார் நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கக் கூடும் என்பதை உறுதிப்படுத்துகின்றன. வீடுகளின் தரைமட்டங்கள், தமிழி (தமிழ்–பிராமி) எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், சுடுமண்ணாலான பொருட்கள் மற்றும் கணிசமான அளவுடன் கூடிய விலங்குகளின் எலும்புகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**புதிய கற்கால இடங்களைக் கண்டறியும் கள ஆய்வு**

3.18. தமிழ்நாட்டிலுள்ள புதிய கற்கால இடங்களைக் கண்டறியும் பொருட்டு சர்மா மரபுசார் கல்வி நிறுவனத்துடன் இணைந்து, வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் உள்ள கிழக்குத் தொடர்ச்சி மலைகளை ஒட்டியுள்ள புதிய கற்கால இடங்களில் கள ஆய்வு மற்றும் அறிவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருந்தொற்று காலக்கட்டங்களில், புதிய கற்கால இடப்பெயர்கள், இடங்களின் புவிசார்– ஒருங்கிணைப்புகள் மற்றும் அவற்றின் புவியியல்–நிலவியல் மற்றும் புவி–உருவவியல் சூழல்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தல் போன்ற திட்டப் பணிகள் முதல் கட்டமாக மேற்கொள்ளப்பட்டன.

மேற்கூறிய தகவல்களைச் சேகரித்த பின்னர், களப் பணிகளை உள்ளடக்கிய திட்டப் பணிகளின் இரண்டாம் கட்டம் 22.03.2021 முதல் 28.03.2021 வரையிலான காலக் கட்டங்களில் கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் வல்லுநர் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது. இக்கள ஆய்வுகள் தொல்லியல், புவியியல் மற்றும் புவி–

உருவவியல் அம்சங்களை உள்ளடக்கியது. கள ஆய்வில், புதிய கற்கால கருவிகள் உற்பத்தி செய்யும் இடங்களை அடையாளம் காணுதல், புதிய கற்கால கருவிகளை உற்பத்தி செய்யும் அரைக்கும் பள்ளங்களை மறு ஆய்வு செய்தல் மற்றும் ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு மாதிரிகள் சேமித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தொல் பொருட்கள் மற்றும் பாறை மாதிரிகள் தற்போது பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

**தாமிரபரணி நதிக்கரை நாகரிகத்தை கண்டறியும் கள ஆய்வு**

3.19. மேற்குத் தொடர்ச்சி மலையின் தென் மேற்குச் சரிவில் பொதிகை மலையில் இருந்து தாமிரபரணி ஆறு உருவாகிறது. இந்த ஆற்றுப் பள்ளத்தாக்கினை, மேல், இடை, கடை பகுதிகளாக பிரித்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆற்றின் மேற் பகுதி முதல் வங்காள விரிகுடாவில் கலக்கும் இடம் வரை 670 ஊர்கள் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றில் 160 தொல்லியல் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதில் பெருங் கற்காலச் சின்னங்கள் மற்றும் வாழ்விடங்களுடன், வீரக்கற்கள், கிண்ணம் போன்ற பதிவுகள், நுண் கற்கால கருவிகள், கல்வெட்டுகள், உதிரிச் சிற்பங்கள்,

மரபுச் சின்னங்கள் போன்ற பல தொல்லியல் சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன.

**2020–2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படும் தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள்**

3.20. 2020–2021 ஆம் ஆண்டு, தமிழகத்தில் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முறையான விரிவான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ள தொடரும் செலவினமாக வழங்கப்பட்டு வந்த ரூ.2 கோடி நிதி ஆதாரத்தினை ரூ.3 கோடியாக உயர்த்தி தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

இதன் அடிப்படையில், சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், அகரம், கொந்தகை, தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை, ஈரோடு மாவட்டத்திலுள்ள கொடுமணல், கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள மயிலாடும்பாறை மற்றும் அரியலூர் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்ட சோழபுரம் என ஏழு இடங்களில் முறையான தொல்லியல் அகழாய்வுகளும் புதிய கற்கால இடங்களைக் கண்டறிய கிருஷ்ணகிரி, வேலூர், தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் ஆகிய மாவட்டங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வு

மற்றும் தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகத்தினைக் கண்டறிய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தொல்லியல் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான ஒன்றிய தொல்லியல் ஆலோசனை வாரிய (CABA) நிலைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அண்மையில், சிவகங்கை மாவட்டம், கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், கொந்தகை, அகரம் ஆகிய இடங்களில் கீழடியின் ஏழாம் கட்ட அகழாய்வுப் பணிகள் 13.02.2021 அன்றும் பிற இடங்களில் முறையே 26.02.2021 அன்றும் அகழாய்வுப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் கள ஆய்வுப் பணிகள் 2021, செப்டம்பர் 30–ஆம் நாள் நிறைவடையவுள்ளன.

**அறிவியல் கால அளவீடு**

**3.21.** அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் எக்காலத்தைச் சார்ந்தவை என்பதற்கு அறிவியல் அடிப்படையிலான பகுப்பாய்வுகள் அவசியமாகிறது. தொல்லியல் பொருட்களின் கால வரிசையை முறையாக மறுகட்டமைப்பு செய்திடவில்லையெனில், தொல்லியல்

ஆய்வுகள் பொருளற்றதாகிவிடும். அகழ்வாய்வுகள் மூலம் அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல் பொருட்களை அவ்வப்போது புகழ்பெற்ற ஆய்வகங்கள் மற்றும் நிறுவனங்களின் உதவியுடன் அறிவியல் நெறிமுறைகளின்படி பகுப்பாய்வு செய்து காலக் கணக்கீடுகள் செய்திடல் அவசியமாகிறது.

**அகழாய்வில் தொழில்நுட்பப் பயன்பாடு**

3.22. அகழ்வாய்வுகளை மேற்கொள்வதற்கு கண்டறிதல் முதல் பொருள் விளக்கம் அறிதல் வரை பல்வேறு தொழில்நுட்பத் திறன்கள் தேவையாக விளங்குகின்றன. கடந்த காலம் குறித்த சிந்தனைகளில் புதுமை வழிகளை ஆராய்வதும், தகவல்களைச் சேகரிப்பதும் அறிவை அதிகரிப்பதும், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதும், அறிவின் அடித்தளத்தை விரிவாக்கி பண்டைய காலம் பற்றிய புரிதலை மேம்படுத்தி, ஒவ்வொருவரின் ஆர்வத்தையும் கற்பனையையும் தன்வசப்படுத்தும்.

இப்பெரு முயற்சியில், மும்பையிலுள்ள இந்தியப் புவி காந்தவியல் நிறுவனம், பெங்களூருவிலுள்ள இந்திய அறிவியல் நிறுவனம், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தொலை உணர்வுத் துறை, அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலை உணர்வு

நிறுவனம் மற்றும் மும்பையிலுள்ள இந்தியப் புவி காந்தவியல் நிறுவனம் போன்ற புகழ்பெற்ற நிறுவனங்களுடன் இணைந்து, தரை ஊடுருவல் தொலையுணர்வி மதிப்பாய்வு (Ground Penetrating Radar), காந்த அளவி மதிப்பாய்வு (Magnetometer Survey), ஆளில்லா வான்வழி வாகன மதிப்பாய்வு (Unmanned Aerial Vehicle) போன்ற பல்வகையான தொழில்நுட்பங்களைப் பின்பற்றி அவற்றின் மூலம் தொல்லியல் இடத்தை அடையாளம் காண்பது மற்றும் முறையான தொல்லியல் தளங்கள் மற்றும் அகழாய்வு பணிகள் மேற்கொள்வது என சீரிய நடவடிக்கைகளில் தொல்லியல் துறை ஈடுபட்டுள்ளது.

தனிச்சிறப்பான பிரிவுகளின் மதிப்பு வாய்ந்த பங்களிப்பினை ஆழமாக பகுத்தாய்ந்து தொல்லியல் கண்டுபிடிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் தொல்–தாவரவியல், மூலக்கூறு உயிரியல், மக்கள் மரபியல், சுற்றுச்சூழல் தொல்லியல் மற்றும் மொழியியல் தொல்லியல் போன்ற துறைகளின் வல்லுநர்களுடன் இணைந்து ஒத்துழைத்து பணியாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

**தொல்லியல் அகழ்வைப்பகங்கள்**

3.23. கள ஆய்வு மற்றும் அகழாய்வுகளில் கிடைக்கும் அரிய தொல் பொருட்கள் பாதுகாக்கப்பட்டு, மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், இத்துறையின் கீழ் செயல்படும் 14 அகழ்வைப்பகங்களில் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொது மக்கள் பயனடையும் வகையில் பார்வைக்கு காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | அகழ்வைப்பகங்கள் | இடம் / மாவட்டம் |
|---|---|---|
| 1) | தேனிசு கோட்டை அகழ்வைப்பகம் | தரங்கம்பாடி / மயிலாடுதுறை |
| 2) | ஆழ்கடல் தொல்லியல் அகழ்வைப்பகம் | பூம்புகார் / மயிலாடுதுறை |
| 3) | கங்கை கொண்ட சோழபுரம் அகழ்வைப்பகம் | கங்கைகொண்ட சோழபுரம் / அரியலூர் |
| 4) | இராமலிங்க விலாசம் அகழ்வைப்பகம் | இராமநாதபுரம் / இராமநாதபுரம் |
| 5) | ஆற்காடு அகழ்வைப்பகம் | ஆற்காடு / இராணிப்பேட்டை |
| 6) | வரலாற்றுக்கு முந்தைய கால அகழ்வைப்பகம் | பூண்டி / திருவள்ளூர் |
| 7) | திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம் | மதுரை / மதுரை |

| | | |
|---|---|---|
| 8) | இராசராசன் அகழ்வைப்பகம் | தஞ்சாவூர் / தஞ்சாவூர் |
| 9) | மராத்தியர் அகழ்வைப்பகம் | தஞ்சாவூர் / தஞ்சாவூர் |
| 10) | கரூர் அகழ்வைப்பகம் | கரூர் / கரூர் |
| 11) | கோயம்புத்தூர் அகழ்வைப்பகம் | கோயம்புத்தூர் / கோயம்புத்தூர் |
| 12) | குற்றாலம் அகழ்வைப்பகம் | குற்றாலம் / திருநெல்வேலி |
| 13) | திருக்கோவிலூர் அகழ்வைப்பகம் | திருக்கோவிலூர் / கள்ளக்குறிச்சி |
| 14) | தருமபுரி அகழ்வைப்பகம் | தருமபுரி / தருமபுரி |

**கீழடி – புதிய அகழ்வைப்பகம்**

3.24. 2019–2020 ஆம் ஆண்டு, சிவகங்கை மாவட்டம், கொந்தகை கிராமத்தில் கீழடி தொல் பொருட்களைக் காட்சிப்படுத்திட உலகத் தரம் வாய்ந்த ஒரு புதிய அகழ்வைப்பகம் அமைத்திட ரூ. 12.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதிய அகழ் வைப்பகத்திற்கான கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையின் மூலம் ஏப்ரல் 2020–இல் தொடங்கப்பட்டு, இந்நிதியாண்டு இறுதிக்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம்**

3.25. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகத்தினை மேம்படுத்திடவும், தொல் பொருட்களை காட்சிப்படுத்திடவும் ரூ. 8.27 கோடி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தின் அருங்காட்சியக நல்கைத் திட்டத்தின் கீழ், 80 : 20 என்ற அடிப்படையில் (ஒன்றிய அரசு பங்கு 80% = ரூ. 661.76 இலட்சம் + மாநில அரசு பங்கு 20% = ரூ. 165.44 இலட்சம்) என பங்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை விரைவில் தொடங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டியல்**

3.26. கற்பாறைகள், தூண்கள், கோயிற்சுவர்கள், செப்பேடுகள், காசுகள், கற்கள், உலோகங்கள், பானைகள், மரங்கள், ஓலைச்சுவடிகள், துணிகள், சங்குகள் மற்றும் ஓவியங்கள் மீதான எழுத்துப் பதிவுகள் பற்றிய ஆய்வு கல்வெட்டியல் எனப்படுகிறது. இப்பதிவு உள்ளத்தை வியக்க வைப்பதாகவும், தகவல் பொருந்தியதாகவும் விளங்குகிறது.

பண்டைய நாகரிகங்களின் வரலாறு, பண்பாடு முதலியவற்றை முழுமையாக வடிவமைத்து அறிந்து கொள்ள உதவும் முக்கியமான சான்றாக கல்வெட்டியல்

விளங்குகின்றது. நீதி இயல், சமுதாயப் பண்பாட்டியல், இலக்கியம், தொல்லியல் ஆகியவற்றின் வரலாற்றுத் தொன்மையை நிலைநிறுத்த முதன்மை ஆவணச் சான்றாகக் கல்வெட்டியல் விளங்குகின்றது.

இந்தியக் கல்வெட்டுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தமிழகக் கல்வெட்டுகள் இந்தியக் கல்வெட்டுகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளன. மொழி, எழுத்துக்கள் மட்டுமின்றி கல்வெட்டுகளின் எண்ணிக்கை, செப்பேடுகளின் எண்ணிக்கை ஆகிய எல்லா பிரிவுகளிலும் இந்திய மாநிலங்கள் அனைத்திலும் தமிழகமே முதலிடம் வகிக்கிறது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் கல்வெட்டியலுக்கு என்று தனிப் பிரிவு 1996–இல் தொடங்கப்பட்டது. இதன் முக்கியப் பணி தமிழகத்தில் கோயிற் சுவர்களிலும், கற்தூண்களிலும், கற்பலகைகளிலும், குகைத் தளங்களிலும், செப்பேடுகளிலும் மற்றும் பிறவற்றிலும் உள்ள கல்வெட்டுகளைப் படியெடுப்பதாகும்.

தற்போது, 35 மாவட்டங்களில் உள்ள கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு அவற்றின் மைப்படித்தாள்கள் இத்துறையால் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களான

புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. படியெடுக்கப்பட்ட 25,027 கல்வெட்டுகளில் 14,340 கல்வெட்டுகள் துறை கல்வெட்டு ஆய்வாளர்களால் பொருள் கண்டுணர்ந்து படிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 7,460 கல்வெட்டுப் பொறிப்புகள் 51 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில் கல்வெட்டுகளை படியெடுத்தல், படித்து பொருள் விளக்கம் செய்து நூல் வடிவில் வெளியிடுதல் போன்ற சீரிய பணிகளை மேற்கொள்ள ரூ. 2 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை ஐந்து ஆண்டு காலத்திற்கு செயல்படுத்திட திட்டமிடப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 40 இலட்சம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. படிக்கப்பட்ட கல்வெட்டுகள் **தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்** என்ற தலைப்பில் மாவட்ட வாரியாக பதிப்பிக்கப்பட்டு வருகின்றன.

இப்பணிகளை மேற்கொள்ள 15 ஓய்வு பெற்ற அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு 3,000 கல்வெட்டுகள் வீதம் வழங்கப்படுகிறது. மேலும், இதுவரை படி எடுக்கப்படாத கல்வெட்டுகளை படியெடுக்கவும், புதிய

கல்வெட்டுகளைக் கண்டறியவும் 5 ஓய்வுபெற்ற கல்வெட்டுச் சிற்றெழுத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 2020–2021 ஆம் ஆண்டில் 120 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.

**தொல்லியல் நிறுவனம்**

3.27. தொல்லியல் துறையில் இயங்கி வந்த கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் 2020–2021 ஆம் ஆண்டு முதல் தொல்லியல் நிறுவனம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு மறுசீரமைக்கப்பட்டுள்ளது. தொல்லியல் துறையின் தலைமையகத்தில், 1974 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் என்னும் ஓராண்டு முதுநிலைப் பட்டய படிப்பை நடத்திவருகிறது. இங்கு ஒவ்வோர் ஆண்டும், முதுகலைப் பட்டம் பெற்ற 8 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு வந்தன. இதுவரை, 264 மாணவர்கள் இப்படிப்பினை நிறைவு செய்துள்ளனர். ஒவ்வொரு மாணவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 4,000/– வீதம் பயிலுதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது.

தற்போது, ஆண்டுதோறும் தொல்லியல் நிறுவனத்தின் வாயிலாக 20 மாணவர்களுக்கு ஈராண்டு தொல்லியல் முதுநிலைப் பட்டயப் பயிற்சி அளிக்கப்படுகிறது. முதுகலையில் ஏதேனும் ஒரு பிரிவில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் நுழைவுத் தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இப்பயிற்சி வகுப்பில் நான்கு பருவத் தேர்வுகள் என, ஒவ்வொரு பருவத் தேர்வுக்கும் 6 தாள்கள் உள்ளன. மொத்தம் 24 தாள்கள் கொண்ட இப்பயிற்சியில் தொல்லியல் சார்ந்த அனைத்துப் பாடங்களும் செய்முறைப் பயிற்சியும் அடங்கும். பல்வேறு தொல்லியல் சார் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த வல்லுநர்களைக் கொண்டு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 5,000/– பயிலுதவித் தொகையாக வழங்கப்படுகிறது. கொரோனா பெருந்தொற்று காரணமாக மாணவர்களுக்கு இக்கல்வி ஆண்டில் இணைய வழியில் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாட்டிலுள்ள பாறை ஓவியங்கள்**

3.28. தமிழ்நாட்டிலுள்ள பாறை ஓவியங்களை இரண்டு முக்கியப் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

1) பாறை ஓவியங்கள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப் பட்டுள்ளன.

- இயற்கை குகைத் தளங்கள்
- பெருங்கற்கால கற்பதுக்கைகள்
- வரலாற்றுக் காலத்தில் மனிதனால் வெட்டப்பட்ட குகைத்தளங்கள்

2) பாறைச் சுவடுகள் மற்றும் வெட்டுகள்

தமிழ்நாட்டில் உள்ள பாறை ஓவியங்களை ஆவணப்படுத்தும் பொருட்டு தொல்லியல் ஆய்வாளர், மானுடவியலாளர், புவியியலாளர், நாட்டுப் புறவியலாளர் மற்றும் நிழற்படக் கலைஞர் போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 8 உறுப்பினர்கள் கொண்ட குழு 11.5.2021 முதல் 16.05.2021 வரை கீழ்க்காணும் இடங்களில் ஆய்வு மேற்கொண்டது.

1. கருக்கியூர், நீலகிரி மாவட்டம்
2. சிறுமலை, திண்டுக்கல் மாவட்டம்
3. உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்

இவ்வாய்வின் போது, பாறை ஓவியங்களில் வேட்டைச் சமூகம், போர்க் காட்சிகள், கால்நடை பராமரிப்பாளர்கள், விலங்கின் மீது சவாரி செய்பவர் என பல்வேறு கருப்பொருள்களும் செங்காவி மற்றும் வெள்ளை நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதும் கண்டறியப்பட்டன.

**அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்**

3.29. ஓலைச்சுவடி என்பது காகிதம், பட்டை, துணி, உலோகம், பனை ஓலை அல்லது அறிவியல், வரலாற்று அல்லது அழகியல் மதிப்புமிக்க பொருட்களில் கையால் எழுதப்பட்ட குறிப்புகள் அடங்கியவை. ஓலைச்சுவடிகள் நூற்றுக்கணக்கான வெவ்வேறு மொழிகளிலும் வரிவடிவங்களிலும் காணப்படுகின்றன.

வரலாற்று நிகழ்வுகள் அல்லது செயல்முறைகள் குறித்த நேரடி தகவல்களை வழங்கும் பாறைகள், நிறுவனங்கள், வருவாய்ப் பதிவுகள் போன்ற வரலாற்றுப் பதிவுகளிலிருந்து ஓலைச்சுவடிகள் வேறுபடுகின்றன.

சென்னையிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் உருவாக்கம் 1861 முதல் ஒரு தனித்துவமான வரலாற்று பின்னணியைக் கொண்டுள்ளது. இந்த நூலகம் கர்னல் கொலின் மெக்கன்சி, சி.பி.பிரவுன் மற்றும் பேராசிரியர் பிக்போர்டு ஆகியோரின் சேகரிப்புப் படைப்புகளாகவும், பின்னர், ஓலைச்சுவடிகளை கூடுதலாக சேகரிப்பதற்காகவும் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது.

அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. தற்போது சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இந்நூலகத்தில் கணிதம், வான் அறிவியல், சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி, வேதங்கள், ஆகமம், கட்டடக்கலை, இசை, கவின்கலைகள், வரலாறு மற்றும் பல்வேறு பொருண்மைகளில் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, உருது, அரபு மற்றும் பாரசீக மொழிகளில் 72,748 அரிய கையெழுத்துப் படிகள் மற்றும் ஓலைச் சுவடிகள் மற்றும் 25,373 மேற்கோள் நூல்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை, 21,00,000 ஓலைச் சுவடி பக்கங்கள் கணினிமயமாக்கப்பட்டு, அதில் 2,400 ஓலைச் சுவடிகட்டுகளின் 3,00,000 மின்னனு மயமாக்கப்பட்ட பக்கங்கள் www.tnarch.gov.in எனும் தொல்லியல் துறையின் வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

**மாநில சுவடிக் குழுமம்**

3.30. 2019–2020 ஆம் ஆண்டுக்கான, மாநிலத்தில் உள்ள ஓலைச் சுவடிகளை அடையாளம் காணவும், பாதுகாக்கவும் அவற்றை முறையாக மின் பதிப்பாக்கம் செய்திடவும் மாநில சுவடிக் குழுமம் ஏற்படுத்தி இத்திட்டத்திற்கு தொடரும் செலவினமாக ரூ. 50 இலட்சம் தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் ஒரு தனித்துவமான சுவடி மையம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களிடம் உள்ள 70,000 ஓலைச்சுவடிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும், இதன் மூலம் இச்சுவடிகள் முறையாக பாதுகாக்கப்பட்டு, இந்த மின் பதிப்பாக்கம் எதிர்கால தலைமுறையினரின் நலன் வேண்டி ஆவணப்படுத்தப்படுகிறது. ஐந்து மண்டலங்கள் மூலம் ஆவணப்படுத்தும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

இம்மாநில சுவடிக் குழுமத்தின் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் அனைத்தும் சர்வதேச தரத்துடன் கூடிய தரக் குறியீட்டுடன் அட்டவணைப்படுத்தப்பட்டு, இறுதியாக அறிஞர்கள்

மற்றும் பொது மக்களின் நலனுக்காக இணைய தளத்தில் வெளியிடப்படவுள்ளன.

**சுவடிகள் வள ஆதார மையம்**

3.31. புதுதில்லியிலுள்ள ஒன்றிய பண்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய சுவடிக் குழுமம் [National Mission for Manuscripts (NMM)] இந்தியாவிலுள்ள அனைத்து ஓலைச் சுவடிகளின் விவரங்களை திரட்டத் திட்டமிட்டு, அதன் ஒரு பகுதியாக தமிழகத்திலுள்ள ஓலைச்சுவடிகளைச் சேகரித்து, அவற்றினை குறுந்தகடுகளில் மின்னணு வடிவில் பதிவு செய்யும் பணிக்காக, தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தினை, தமிழகத்தின் சுவடிகள் வள ஆதாரமையமாக (MRC) அங்கீகரித்துள்ளது. இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 66,110 சுவடிகள் மின்னணு முறையில் பதிவு செய்யப்பட்டு, புதுதில்லியில் உள்ள தேசிய சுவடிகள் குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

**முடிவுரை**

3.32. தொல்லியல் மற்றும் நமது மரபு குறித்தான ஆர்வம் தமிழ் நாட்டில் தற்போது புத்தாக்கம் பெற்றுள்ளது. எனவே, கடந்த காலத்தைப் பற்றி கற்கவும், கண்டறியவும், அக்கறை கொள்ளவும் நமது

பன்முகம் கொண்ட வளமையான பாரம்பரியத்தை உலகிற்கு அறியச் செய்யவும் அளப்பரிய வாய்ப்புகள் உள்ளன என்றும், அதன் மூலம் நமது மேன்மைக்கும் அறிவுக்கும் வளம் சேர்த்து இறுதியாக தமிழ்நாட்டின் வரலாற்றை உலக அரங்கில் நிலை நிறுத்தும் என்றும் கூறலாம்.

தற்போது நடைபெற்று வரும் களப்பணிகளான பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களைப் பராமரித்தல், தொல்லியல் ஆய்வு மற்றும் அகழாய்வுப் பணிகள், சுவடிகள் பாதுகாப்பு, கல்வெட்டுகளைப் படியெடுத்தல் போன்ற ஆய்வுப் பணிகளில் உலகத்தரம் வாய்ந்த நடைமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதை தமிழகத் தொல்லியல் துறை உணர்ந்துள்ளது. நன்கு வடிவமைக்கப்பட்ட பன்முக அணுகுமுறைகளின் வழியாக தமிழ்நாட்டில் மரபுசார் மேலாண்மையினை மேம்படுத்த முடியும் என எதிர்நோக்குகிறோம்.

**தங்கம் தென்னரசு**


தொழில் துறை அமைச்சர்

# இணைப்பு

| வ.எண் | இடம் | மாவட்டம் | அகழாய்வு செய்த ஆண்டு | இடத்தின் வகைப்பாடு |
|---|---|---|---|---|
| 1 | கொற்கை | தூத்துக்குடி | 1968–69<br>**2020–21** | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 2 | பாஞ்சாலங்குறிச்சி | தூத்துக்குடி | 1968–69 | நவீன காலம் |
| 3 | வசவசமுத்திரம் | காஞ்சிபுரம் | 1969–70 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 4 | ஆனைமலை | கோயம்புத்தூர் | 1969–70 | பெருங்கற் காலம் |
| 5 | பல்லவமேடு | காஞ்சிபுரம் | 1970–71 | இடைக் காலம் |
| 6 | கரூர் | கரூர் | 1973–74<br>1994–95 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 7 | பனையகுளம் | தருமபுரி | 1979–80 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 8 | போளுவாம்பட்டி | கோயம்புத்தூர் | 1979–80<br>1980–81 | இடைக்காலம் |
| 9 | கோவலன்பொட்டல் | மதுரை | 1980–81 | பெருங்கற் காலம் |
| 10 | தொண்டி | இராமநாதபுரம் | 1980–81 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 11 | கங்கைகொண்ட சோழபுரம் | அரியலூர் | 1980–81<br>1986–87<br>2008–09<br>**2020–21** | இடைக்காலம் |
| 12 | கண்ணனூர் | திருச்சி | 1982–83 | இடைக்காலம் |
| 13 | குறும்பன்மேடு | தஞ்சாவூர் | 1984–85 | இடைக்காலம் |
| 14 | பழையாறை | தஞ்சாவூர் | 1984–85 | இடைக்காலம் |
| 15 | அழகன்குளம் | இராமநாதபுரம் | 1986–87<br>1990–91<br>1992–93 | வரலாற்றுத் தொடக்க காலம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 1994–95<br>1996–97<br>2014–15<br>2016–17 | |
| 16 | திருக்கோயிலூர் | விழுப்புரம் | 1992–93 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 17 | கொடுமணல் | ஈரோடு | 1992–93<br>1996–97<br>2019–20<br>**2020–21** | பெருங்கற் காலம் மற்றும் வரலாற்றுத் தொடக்க காலம் |
| 18 | சேந்தமங்கலம் | விழுப்புரம் | 1992–93<br>1994–95 | இடைக்காலம் |
| 19 | படவேடு | திருவண்ணா மலை | 1992–93 | இடைக்காலம் |
| 20 | திருத்தங்கல் | விருதுநகர் | 1994–95 | நுண்கற்காலம் |
| 21 | பூம்புகார் | நாகப்பட்டினம் | 1994–95<br>1997–98 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 22 | மாளிகைமேடு | கடலூர் | 1999–00 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 23 | தேரிருவேலி | இராமநாதபுரம் | 1999–00 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 24 | மாங்குடி | திருநெல்வேலி | 2001–02 | நுண்கற் காலம் |
| 25 | பேரூர் | கோயம்புத்தூர் | 2001–02 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 26 | ஆண்டிபட்டி | திருவண்ணா மலை | 2004–05 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 27 | மோதூர் | தருமபுரி | 2004–05 | புதிய கற்காலம் |
| 28 | மரக்காணம் | விழுப்புரம் | 2005–06 | இடைக் காலம் |
| 29 | பரிக்குளம் | திருவள்ளூர் | 2005–07 | பழைய கற்காலம் |
| 30 | நெடுங்கூர் | கரூர் | 2006–07 | பெருங்கற் காலம் |
| 31 | மாங்குளம் | மதுரை | 2006–07 | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 32 | செம்பியன்கண்டியூர் | நாகப்பட்டினம் | 2007–08 | பெருங்கற் காலம் |
| 33 | தரங்கம்பாடி | நாகப்பட்டினம் | 2008–09 | நவீன காலம் |


| | | | | |
|---|---|---|---|---|
| 34 | இராஜாக்கள்மங்கலம் | திருநெல்வேலி | 2009–10 | இடைக் காலம் |
| 35 | தலைச்சங்காடு | நாகப்பட்டினம் | 2010–11 | இடைக் காலம் |
| 36 | ஆலம்பரை | காஞ்சிபுரம் | 2011–12 | நவீன காலம் |
| 37 | ஸ்ரீரங்கம் | திருச்சி | 2013–14<br>2014–15 | இடைக் காலம் |
| 38 | உக்கிரன்கோட்டை | திருநெல்வேலி | 2014–15 | இடைக் காலம் |
| 39 | பட்டறைபெரும்பு தூர் | திருவள்ளூர் | 2015–16<br>2017–18 | கடைக்கற் காலம் |
| 40 | கீழடி | சிவகங்கை | 2017–18<br>2018–19<br>2019–20<br>**2020–21** | வரலாற்றுத் தொடக்க காலம் |
| 41 | ஆதிச்சநல்லூர் | தூத்துக்குடி | 2019–20<br>**2020–21** | இரும்புக்காலம் |
| 42 | சிவகளை | தூத்துக்குடி | 2019–20<br>**2020–21** | இரும்புக் காலம் |
| 43 | மயிலாடும்பாறை | கிருஷ்ணகிரி | **2020–21** | புதிய கற்காலம் |




**தொல்லியல் துறையால் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்கள்**



மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் , சிவகளை அகழாய்வு தளத்தை 11.07.2021 அன்று பார்வையிடல்.




தூத்துக்குடி மாவட்டம் , சிவகளை அகழாய்வுக் குழிகளின் வான்வழிப் பார்வை.



தூத்துக்குடி மாவட்டம், கொற்கை அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்ட செங்கற் கட்டுமானம் மற்றும் தனித்துவமிக்க துளையிடப்பட்ட சுடுமண் குழாய்கள்.




சிவகங்கை மாவட்டம், அகரம் மற்றும் கீழடி அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்ட உறைகிணறுகள்.




சிவகங்கை மாவட்டம், கீழடி அகழாய்வில் வெளிக்கொணரப்பட்ட கி.மு. 4 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட வெள்ளி முத்திரைக்காசு.




அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரம் – மாளிகைமேடு அகழாய்வில் வெளிக்கொணரப்பட்ட செங்கற் கட்டுமானம்.



ஈரோடு மாவட்டம், கொடுமணல் அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ள படிக்கட்டுக் கிணறு.



கிருஷ்ணகிரி மாவட்டம், மயிலாடும்பாறை அகழாய்வில் பெருங்கற்கால கற்பதுக்கையில் மூன்று கால்கள் கொண்ட ஜாடிகள் மற்றும் ஈமச்சடங்கு மட்பாண்டங்கள்.



திண்டுக்கல் மாவட்டம் சிறுமலையில் உள்ள பாறை ஓவியங்களை ஆவணப்படுத்துதல்.



அரியலூர் மாவட்டம் இளையபெருமாள் நல்லூரில் உள்ள கி.பி. 14– ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சுடுமண்ணாலான யானைச் சிற்பம் – அண்மையில் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்டது.